NEHRU NEWS MART, 4/2 CORNER, MYLAPORE, MADRAS-4 425

முரசொலி
வார இதழ்.
ஆசிரியர் மு. கருணாநிதி.

முரசு 2 | சென்னை | 2–12–55 | வெள்ளி | ஒலி 36

# புல்கானின் பேச்சு — புகையும் எரிமலை வீச்சு!

பொட்டல் வெளியாய் இருந்த சோவியத் பூமியை பொன் விளையும் நாடாக்கிய பொதுவுடமைத் தூதுவர்கள் வந்தார்கள் — பூமழையை வரவேற்பாகப் பெற்றார்கள்!

குருஷேவ் ரஷ்யகம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளர் என்ற முறையிலே இங்கு வந்திருப் பாரேயானால் அவருக்கு முகம் காட்டாமல் முதுகு காட்டுபவர்கள்கூட, ஒரு நாடு அவர் கையில் இருக்கிறது-- என்றபோது இருகையேந்தி வீதியின் மருங்கெல்லாம் நின்றார்கள்!

பரிசுகள்; விருந்துப் பந்திகள் புன்சிரிப்பு தவழும் வதனங்கள் —இவைகளையெல்லாம் சோவியத்தின் பிரதிநிதிகள் திரும்பிய பக்கமெல்லாம் கண்டு மகிழ்ந்தார்கள்!

தோரண வாயிலும், வரவேற்பு வளைவுகளும் "வாழ்க நீவிர்! வாழ்க நீவிர்!" என்று அன்புப் பறை முழக்கின!

ஆரத்தி எடுத்தார்கள்; தாம்பூலம் கொடுத்தார்கள்; பொன்னாரம் சூட்டினார்கள்— பழமைப் பித்தர்களும் இந்த வரவேற்பு வைபவங்களிலே முதலிடத்தில் நின்று, புகைப் படங்களுக்குத் தலையை நீட்டினார்கள்!

அவர்களுக்கு மகிழ்ச்சிதான்: புளகாங்கிதம்தான் - சோவியத்தின் கண்மணிகளைக் கண்களால் பார்த்தோமே; கரங்களால் தொட்டு மாலை சூட்டினோமே என்று மகிழ்ச்சிப் பெருக்குதான்!

இராமநாதபுரம் ராஜா சண்முக ராஜேஸ்வர சேதுபதி பொதுவுடமை வாதிகளின் பாஷையில் சொல்லப் போனால் ஒரு பச்சைப் பூர்ஷ்வா! கோவையிலே அவர் பாட்டாளிகளின் பிரதிநிதிகளுக்கு மாலை சூட்டியபோது, அவர் உள்ளமும் உள்ளபடியே மகிழ்ச்சியால் ஊடுருவப் பட்டிருக்கும்!

மறைந்து மண்ணாகிப் போன சக்கரவர்த்தித் திருமகனை சமாதிக் குழியிலிருந்து தோண்டி நாற்றம்போக அதன்மீது புதுச் 'செண்டு' பூசிக் கொண்டிருக்கும் ஆச்சாரியாரும் வறுமைக் காய்ச்சல் போக்கி, ரஷ்ய நாட்டினருக்குப் பொதுவுடமை காய கல்பம் வழங்கியோருடன் அளவளாவியிருக்கிறார்.

சுயமரியாதை—என்றால் சீறி விழும் சுப்ரமணியனார் புல்கானின் குழுவினருக்குப் புன்முறுவல் காட்டத் தவறவில்லை.

அவர்களை இரு கை நீட்டி வரவேற்ற போதெல்லாம் அவர்கள் நினைக்கத் தவறிய நீதி வாக்கு ஒன்றுண்டு!

புல்கானின்; குருஷேவ்— இவர்கள் நடமாடும் நாத்திகத்தின் சிகரத்தில்நின்று சிந்து பாடும் செல்வங்கள்!

பச்சை நாத்திகம்; நிரீசுரவாதம்—என்றெல்லாம் பகுத்தறிவு வாதிகள் மீது கணைகள் தொடுப்பார்களே—அத்தகைய கொள்கையைக் கேடயமாகக் கொண்டு மடமையை வெல்லச் சூளுரைத்துக் களம் புகுந்திருப்பவர்தான் புல்கானின்! அதே கருத்துக்களின் கருவூலம்தான் குருஷேவ்!

—அவர்களை வரவேற்ற வறட்டு மதி படைத்தோர் இதைஉணர வேண்டும்.

அவர்களுக்கு மாலையிட்டவர்கள் மாள முடியாத நாத்திகத்துக்கு மாலையிட்டிருக்கிறார்கள்!

அவர்களுக்கு மரியாதை செய்தவர்கள் பகுத்தறிவு இயக்கத்தை-அதைப் பரப்பிவரும் நம்மை மரியாதை செய்தவர்களாவார்கள்!

விபூதிப் பட்டை அணிபவர்கள்; விரதம் அனுஷ்டிப்பவர்கள்; விக்ரக ஆராதனைக்காக மலை மீதேறி படிக்கட்டுகளைக் கணக்கிடுபவர்கள்; ஜெபமாலை உருட்டி ஜெகத்தை மறந்திருப்பதாக பாவனை செய்பவர்கள்— இத்தகையோரில் யாராவது சோவியத் பிரதிநிதிகளைவரவேற்றிருப்பார்களேயானால் அந்த பழமைப்பிரதிநிதிகள் தாங்கள் வரவேற்றது சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளியைத்தான் என்பதை உணரவேண்டும்!



—அவர்கள் உணரவேண்டிய உன்னதமான கருத்து இன்னொன்றும் இருக்கிறது!

வடக்கு வாழ்கிறது; தெற்கு தாழ்கிறது — என்றால் 'சிவ, சிவா!' என்று காதை மூடிக் கொள்கிறார்களே அத்தகையோரின் கவனத்தை ஈர்க்கும் கருத்து அது!

ஐந்தாண்டுத் திட்டத்தினால் விந்தியத்தின் வடக்குப் பகுதி ஐராவதம் யானையைப்போல கொழுக்கிறது—என்பதை கிண்டி ராஜபவனத்தில் ரஷ்யப் பிரதமர் புல்கானினே சுட்டிக் காட்டியிருக்கிறார்!

டில்லியிலே பயணத்தைத் துவங்கி பஞ்சசீலம் பேசும் பண்டிதரின் ஆளுகைக்குட்பட்ட பரதகண்டத்தையே பார்வையிட்டிருக்கிறார்!

முக்கியமாக அவர் பார்க்காத இடங்கள் இரண்டு: ஒன்று ஆந்திரா! இன்னொன்று மலையாளப் பகுதி!

இரண்டிலும் கம்யூனிஸ்ட்டுகள் அதிகமென்று ஆட்சியாளர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே புல்கானின்-குருஷேவ் வரவினால் 'அந்தப் பிராந்தியங்களில் பொதுவுடமைப் பித்து அதிகரித்து விடுமோ'!—என்று அவர்கள் கலங்கியிருக்கலாம்.

—அந்தப் பகுதிகளைத் தவிர அவர்கள் ஏறக்குறைய ஏக இந்தியா' | என்று சொல்லப்படுகிற அத்தனைப் பகுதிகளையும் பார்வையிட்டிருக்கிறார்கள்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

Best copy available

# தமிழர்களுக்கு இழைத்த துரோகம்!

**அன்புள்ள குமார்,**

**ரஷ்யத்தலைவர் புல்கானினுக்கும்-கம்யூனிஸ்டு காரியதரிசி குருஷேவ்விற்கும் இந்திய உப கண்டத்தில் அளிக்கப்படும் கோலாகலமான வரவேற்பை நீ அறிந்திருப்பாய்: அவர்களுக்கு தருகின்ற வரவேற்புப் பத்திரங்கள், இந்தி, அல்லது ஆங்கிலம், ஆகிய இரண்டு மொழிகளில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று 'தாய் மொழிக்கு முதலிடம்', தருவதாக வாயளவில் பேசிவரும் சர்க்கார் உத்திர விட்டதையும், ஆனால் கோவை சென்னை போன்ற இடங்களில், தமிழிலேயே வரவேற்பு அளித்து 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்பதை நிலை நாட்டியதற்காக, நாம் பெருமைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.**

**உலக வல்லரசுகள், விழிகளைக்கூர்மையாக்கிக்கொண்டு கவனிக்கும் இந்த ரஷ்யத் தலைவர்களின் பயணத்தில்-புல்கானினைவிட, குருஷேவ் 'சொற்சிலம்பாடுவதில்' திறமை பெற்றுள்ளவர் என்பதை நீ அறிந்திருப்பாய்.**

**பொதுவாக அவர் பேச்சுக்கள் நகைச் சுவையைப் பின்னணியாகக் கொண்டிருந்தாலும், ஆழ்ந்த கருத்துக்களை கருவிலே கொண்டிருப்பதை கூர்ந்து கவனித்தால் புரிந்து, கொள்ளலாம்.**

**காட்சிகளையும், சம்பவங்களையும், அவர் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது, நாம், 'ஆகா!' போட்டு பெருமைப் பட்டுக்கொண்டிருக்கும் 'குதுப்மினார்' தரும் எழில், கோலேந்திகளின் கொடுமையை 'எதிர்க்க முடியாத ஏழைகளின் கண்ணீரிலே உருவான கோபுரமாகத் தெரிகிறது. 'அரிய சாதனை' என்று எண்ணப்படும் பெரம்பூர் எஃகு தொழிற்சாலை—இரும்புக்கு பதிலாக 'காங்கிரீட்டில்' உருவாக்கப் பட்டிருந்தால், செலவழித்த பணத்தில் முக்கால் பங்கை மிச்சம் பிடித்திருக்கலாம்; என்று கூறுகின்ற அளவிற்கு — காட்சிகளைக் கருத்துடன் உரசிப் பார்த்தபிறகே முடிவிற்கு வருகிறார் குருஷேவ் என்பது தெளிவாக வில்லையா?**

குமார்! சரித்திரத்தில் இடம் பெறத்தக்க இந்த விஜயத்தில்—கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசி இந்திய கம்யூனிஸ்டுகளைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லையே? என்று கேட்டிருந்தாய்; நானும் அதைப்பற்றி எண்ணியதுண்டு — குருஷேவின் பெங்களூர் பேச்சுக்கு முன்பு; ஆனால், 28—11—55 தேசிய ஏடொன்றில் 'இந்திய கம்யூனிஸ்டுகளைப் பற்றி குருஷேவ்' என்ற தலைப்பில் செய்தி வெளியாகி இருக்கிறது! அதில்—இந்திய கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளை தான் ஆதரிக்கவில்லையென்றும், ரஷ்ய கம்யூனிஸ்டுகளுக்கும், இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு மிடையே மலையொத்த வேறுபாடுண்டென்றும், அயல் நாட்டுக் கம்யூனிஸ்டுகள், உருப்படியான ஆக்க வேலைகளில் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், இந்திய கம்யூனிஸ்டுகள் வேறு விதமான செயல் முறைகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

குமார், கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசி, இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு கொடுத்திருக்கும் இந்த 'நற்சாட்சி'ப் பத்திரத்தை, ஆதரிப்பதோடு மட்டுமல்ல—முழுமனதுடன் வரவேற்க வேண்டிய நிலைமைக்கு—கம்யூனிஸ்டுகளின், போக்கு சென்று கொண்டிருப்பதை நீ அறிந்திருப்பாய்.




இந்திய கம்யூனிஸ்டுகள், குறிப்பாக தென்னாட்டு கம்யூனிஸ்டுகளைப் பற்றி நாம் கொண்டுள்ள அதே கருத்தை தான், கட்சி காரியதரிசி குருஷேவ்வும் வெளியிட்டிருக்கிறார்.

தென் இந்திய கம்யூனிஸ்டுகளின் கொள்கைக் குழப்பத்தையும், 'வழவழப்பான' முடிவுகளையும், முரண் பாடான செயல்முறைகளையும் கவனிக்கும்போது, உண்மையாகவே நமக்கு அனுதாபம் ஏற்படாமல் இருக்க முடியவில்லை.

இரும்புத் திரை தொங்கும் நாடெனக் கருதப்படும் ரஷ்யாவிலிருந்து, ஊஞ்சலாடும் பூத் திரைகளை விலக்கியபடியே, வெளிப்படையாக இந்திய கம்யூனிஸ்டுகளைப் பற்றி குருஷேவ் தந்துள்ள கருத்து, எத்தகைய உண்மையான படப்பிடிப்பு என்பதை தென்னாட்டு கம்யூனிஸ்டுகளின் தற்காலிக சரித்திரத்தை ஒருமுறை புரட்டிப் பார்த்தால் தெளிவாகும்.

குமார்; மொழிவழிமாநில அமைப்பு குறித்து சட்டசபையிலே, நடைபெற்ற விவாதத்தில் கம்யூனிஸ்டுகள் நடந்து கொண்ட இழிமுறையை நாளேடுகளில் நீ பார்த்திருப்பாய்:

'ஐக்கிய தமிழகம்'பற்றி செஞ்சட்டையினர் வாய்கிழியப் பேசாத மேடைகளில்லை தமிழர் வாழும் பகுதிகள், தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டிய நியாயமான கிளர்ச்சிகளுக்கு தங்கள் முழுப் பங்கினையும் செலுத்த தயார், என்று மேடை கிடைக்கும் போதெல்லாம் கம்யூனிஸ்டுகள் கர்ஜித்தனர். சண்டமாருதமென முழங்கினர். ஆனால் 'சோதனை' வந்த போது கம்யூனிஸ்டுகளுக்கே உரித்தான அந்த 'விலாங்கு' மனம்பான்மை. தென்னாட்டு கம்யூனிஸ்டுகளுக்கு தமிழர்களின் நல்வாழ்வில், எத்தகைய 'நல்லெண்ணம்', இருக்கிறது என்பதை மெய்ப்பித்துவிட்டிருக்கிறது:

மொழிவழியமைப்பை வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் வலியுறுத்திக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள் 'செயல்பட வேண்டிய நேரத்தில் 'ஊமை நாடகம்' நடத்தியதேன்?

'மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட தொடர்புள்ள கூட்டாட்சிதான் நாம் கேட்கும் திராவிடம்' என்ற தெளிவான—கோரிக்கையை, புரிந்து கொள்ள மறுக்கும் தென்னாட்டு கம்யூனிஸ்டுகளை நீ, கேட்க வேண்டாம்; உன் நினைவேட்டிலே குறித்துக் கொள். தென்னாட்டு கம்யூனிஸ்டுகள் தமிழர்களுக்கு இழைத்த கேடு—என்ற பட்டியல் தயாரிக்கும் போது, இதையும் ஒன்ருக சேர்த்துக் கொள்.

தமிழகத்துடன் நியாயமாக இணைக்கப்பட வேண்டிய தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என்பதில், கன்னடிய உறுப்பினர்களிடம் இருந்த கண்யம், காணப்பட்ட பெருந்தன்மை, இந்த கம்யூனிஸ்டுகளிடம் கருகிப் போய் இருக்கிறது!

ஆம் குமார்!

"தேவிகுளம், பீர்மேடு, ஆகிய பகுதிகள், தமிழர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் அவை தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தின்மீது சென்னை சட்டசபையிலே ஓட்டெடுப்பு நடைபெறும் பொழுது ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள்:

இது இங்கே.

திரு. கொச்சி சட்டசபையில் தேவிகுளம், பீர்மேடு, மலையாளத்துடன் இணைந்திருக்க வேண்டும், என்ற தீர்மானத்தின்மீது ஓட்டெடுப்பு நடைபெரும் பொழுது அங்கிருக்கும் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் எதிராக ஓட்டளித்திருக்கிறார்கள்.

இது அங்கே!

ஒரே பிரச்சனை; ஒரே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்; முரண்பாடான எண்ணம்! இந்த நிலைமையில் 'அகில இந்திய ஒற்றுமை'க் குறித்து, அடிவயிற்றிலிருந்து குரலெழுப்பும் விந்தையை நினைத்து அனுதாபப் படாமல் வேறென்ன செய்ய முடியும்;

ஓட்டெடுப்பின்போது, சட்டசபையில் கம்யூனிஸ்டுகள் பின்பற்றிய முறை தமிழர்களுக்கு ஓர் படிப்பினை!

'பசில் அலிக்' குழுவினர் கிழித்த கோட்டையும்தாண்டி, தேவிகுளம், பீர்மேடு, ஆகிய தமிழர் வாழ் பகுதிகளை, தமிழகத்துடன் சேர்ப்பதற்கு ஆட்சியாளர் எடுத்துக் கொண்ட அக்கரையை, பாராட்டுவதோடு, தமிழர்களுக்காக, கண்ணீர் வடிப்பதாக காட்டிக் கொண்ட தென்னாட்டு கம்யூனிஸ்டுகளின் உண்மையான 'நிறம்' எது என்பதை உன்னால் மறக்க முடியாது என்று நம்புகிறேன்.

சென்னை சட்ட சபையில் ஓட்டெடுப்பின்போது நடத்திய 'ஊமை நாடகத்திற்கு' "கம்யூனிஸ்டுகள்தமிழர்களுக்கு இழைத்த துரோகம்" என்பதைத் தவிர வேறு அழகான வார்த்தை கிடைக்கவில்லை. இதே பொருள்பட வேறு கிடைத்தால் பொறுத்திப் பார்த்துக் கொள்.

அன்புள்ள,

**பொன்முடி**

One side page dark

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 2—12—55 வெள்ளி

## நால்வர் முடிவு!

ரஷ்யப் பிரதமர் புல்கானினையும், கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் குருஷேவையும் டெல்லி நகரம் ரோஜா மலர் தூவி வரவேற்றபோது, பம்பாய் நகரத்தில் இரத்தத் துளிகளை மழையெனப் பொழிந்து தேசிய அரசாங்கம் வரவேற்பு வளைவுகளைக் கட்டியிருக்கிறது!

நவம்பர் 21-ம் தேதியன்று பம்பாய் நகரைத் தனி மாநிலமாக்கக் கூடாது—என்பதற்காக நடத்தப்பட்ட பொதுவேலை நிறுத்தத்தில், போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பதினேரு உயிர்களை பிணமாகச் சாய்த்திருக்கின்றனர்.

அதற்கு மறுநாள் மோரோக்காவிலே **19**-பேர் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பலியாகியிருக்கின்றனர்.

அடிமை நாட்டிலும் மக்கள் உயிர் துறக்கின்றனர். சுதந்தர பூமி என்று சொல்லப்படும் இந்த மண்ணிலும் அதே பரிசுதான் கொடுக்கப் படுகிறது,

மராத்திய மொழி பேசுவோருக்கு சரியான நீதி கிடைக்கவில்லை. அவர்களுடைய உரிமைக் குரல் மதிக்கப்படவில்லை என்ற காரணத்துக்காக மக்கள் கொதிப்படையும் சூழ்நிலையை தேசியத்தார்கள் உருவாக்கி விட்டார்கள்.

தென்னகத்தைப் பொறுத்த வரையில் மொழியின் அடிப்படையில் மாநிலங்களுக்குக் கோடிழுத்த பசுல் அலிக் குழுவினர் வட நாட்டைப் பொறுத்த வரையில் ;அந்தக் கொள்கையைக் கடைப் பிடிக்கவில்லை. தமிழகம்; ஆந்திரம்; கேரளம்; கன்னடம்—என்று எல்லை கண்டு மொழிகளுக்கு மகுடம் புனைந்தவர்கள் மராட்டியர்களையும், குஜராத்திகளையும் மோத விட்டார்கள். சீரமைப்புக் குழுவின் முடிவுகளுக்குப் பிறகும் நிலைமை சீரடையாத காரணத்தால், நேரு, தேபர், பந்த்; மௌலானா ஆசாத்—ஆகிய நால்வர் கொண்ட காங்கிரஸ் கட்சிக் குழுவும் நிலைமையை உணர்ந்து நேர்மைவழிப்படி நடந்ததாகத் தெரியவில்லை.

பம்பாய் நகரம் மராட்டிய மண்டலத்துக்கா? குஜராத்திய சீமைக்கா?—என்ற கேள்வி கேட்டு மக்கள் மன்றம் கொதித்தெழுந்த போது, நீதியை உணர முடியாமல் நால்வர் குழு பம்பாயைத் தனி மாநிலமாகவே மாற்றிவிடுவது—என்ற முடிவுக்கு வந்திருக்கிறது.

குஜராத்திகள் பம்பாய் தங்கள் பகுதியில் சேரவேண்டுமென்று சட்டாயப் படுத்துவதைவிட, அது தனி மாநிலமாகவே இருக்கட்டும் என்பதில்தான் அதிகக் கவனத்தைச் செலவிடுகிறார்கள்.

முன்பு சென்னை நகர் தமிழருக்கா? தெலுங்கருக்கா?— என்ற வினா எழுந்தபோது, 'சென்னையைத் தனி மாநில மாக்குங்கள்' என்று ஆந்திர கேசரிகள் கிளப்பிய அதிர்வேட்டைப் போலவே இன்று குஜராத்திகளும் பம்பாயைப் பொருத்த வரையில் 'குதர்க்க வாதத்'தை வீசிப் பார்க்கிறார்கள்.

உடமை தன்னுடையதல்ல என்று உணர்ந்ததும் ஆந்திரர்கள் எப்படி சென்னையைத் தமிழர்களுக்குச் சேர்க்காவண்ணம் சதி செய்தார்களோ அதே முயற்சிகளைக் கையாண்டு பம்பாயை மராட்டியர் கைக்குக் கிட்டாமல் செய்ய கோரிக்கை எழுப்புகின்றனர் குஜராத்திகள்!

—ஆனால் இந்தக் குஜராத்தியர் வீசிய வலையிலே விழுந்து, ஒரு சில பணமூட்டைகளுக்குப் பணிந்து கொடுப்பதைப் போல காங்கிரசின் நால்வர் குழு தன்னுடைய தீர்மானத்தைத் தீட்டியிருக்கிறது.

—இதை எதிர்ப்பதற்காகத்தான் பம்பாய் பதினேரு உயிர்களைப் பலி கொடுக்க வேண்டிய பரிதாப நிலையும் ஏற்பட்டிருக்கிறது!

சோவியத் நாட்டிலிருந்து தூதவர்கள் வந்திருக்கிறார்களே; அவர்கள் திரும்பிப் போகும் வரையிலாவது துப்பாக்கிக் குழாய்களை மூடி வைத்திருக்கலாமே என்றுகூட யோசிக்காமல் கர்ஜனை புரிந்திருக்கிறார்கள், பம்பாய் போலீசார்!

எதற்கெடுத்தாலும் தோட்டா தர்பார் நடத்தி, காட்டாட்சி நடத்துவதிலே கரை காணா இன்பம் காணும் இந்த ஆட்சியாளர்கள் பதினேரு பேரை பிணமாக்கிய தோடல்லாமல் முன்னூற்றுக்கு மேற்பட்டோருக்கும் காயங்களையும் தந்திருக்கிறார்கள்!

ஏன் இந்த நிலைமை? மொராக்கோ போன்ற அன்னிய ஏகாதிபத்ய ஆட்சிமுறையிலே காணப்படும் காட்சிகள் தொடர்ந்து இங்கும் காணப்படுவதேன்?

ஒரே காரணம்தான் உண்டு! பொதுமக்களின் மனப்போக்கை அறிந்து கொள்ள முடியாத நிலையிலே இருப்பவர் கையிலே இன்று செங்கோல் இருக்கிறது.

'நேரு உலகளந்தவர்; தேபர் தேசாபிமானத்தை அளப்பதிலே தேர்ச்சி கொண்டவர்; உள்நாட்டு பிரச்னைகளுக்கு முடிவு காணுவதிலே பந்த் புலி; ஆசாதின் ஞானமோ அலைகடலையும் மிஞ்சுவது'—

—புகழ் மாலைகள் இப்படியெல்லாம் தொடுக்கப்பட்டும் என்ன பயன்? அந்த நால்வரும் கூடிக்கூடி கொண்டு வந்த முடிவு பம்பாயிலே ஒரு மாபெரும் பிரளயத்தை உண்டுபண்ணுவதாய் அமைந்து விட்டது!

நீதி கிடைக்காத நேரத்தில் மக்கள் நெருப்புப் பொறிகளாய் மாறி விட்டார்கள்!

—பம்பாயைப் பொருத்த வரையிலே 'நால்வர் குழு' முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்! இல்லையேல் முடிவேயில்லாத மராட்டிய வீரர்களது மண் மீட்கும் போரையாவது தாங்கிக் கொள்ள அவர்கள் தயாராக வேண்டும்-என்பதை நம்மால் சுட்டிக் காட்டாமலிருக்க முடியவில்லை!

★

## டாக்டர் வாழ்க!

தென்னாட்டின் அரசியல் விழிப்புக்குக் காரணமாயிருந்த பெரியார், திரு. வி. க., டாக்டர் பி. வரதராஜுலு—ஆகிய மூவருள் ஒருவரான டாக்டர் அவர்களின் அறுபத்தி எட்டாவது பிறந்தநாள் விழா சென்ற கிழமை சென்னை நகரில் குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்து நடந்த கூட்டத்தில் பெரியார் அவர்களும், தி. மு. கழகத்தின் சார்பாக தோழர் மதியழகன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

பொது வாழ்வு பலருக்குப் புதிராக இருந்த நேரத்தில், துணிவுடன் நாட்டுப் பணிபுரிந்து தியாகத் தழும்புகள் பல பெற்றவர் டாக்டர் வரதராஜுலு! 'நாயகர் (பெரியார்), முதலியார் (திரு வி. க.), நாயுடு (டாக்டர்)' —ஆகிய மூவராலேயே தான் காங்கிரஸ் தமிழகத்தில் வேரூன்றியது-என்று சரித்திரம் பேசும் அளவுக்கு அவர் புகழ் பெற்றிருக்கிறார். ஆரிய முதலைகள் வாழும் தேசியக் கூடாரத்தில் இருந்து கொண்டே, திராவிட இனத்தவரின் முன்னேற்றத்திலே கண்ணும் கருத்துமாய் இருக்கும் டாக்டர் அவர்களை அவருடைய 68-வது பிறந்த நாளன்று நாமும் வாழ்த்துகிறோம்! வாழ்க டாக்டர்! வளர்க அவரது தொண்டு!

## மாநில மாநாட்டு நிதிக்கு கர்னடகத்தின் காணிக்கை!

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு நிதிக்கு —கர்னடகத்தின் பங்குத் தொகையான ரூ. 500-ல் முன்பே கொடுக்கப்பட்ட ரூ. 100 போக மீதி தொகையான ரூ. 400ம் 27—11—55 மாலை 4-30 மணிக்கு,சர். கே. பி. புட்டண்ண (செட்டி) நகர மண்டபத்தில், பெங்களூர் மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தோழர் மு. கருணநிதி அவர்களிடம் கொடுக்கப்பட்டது. மண்டபத்திற்கு உள்ளும் வெளியிலும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் மு. கருணநிதியும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களும் சுமார் 4 மணி நேரம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் அது ஆற்றி வரும் அரிய பணியினையும் விளக்கி—திருச்சியிலே நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டில் கன்னட மாவட்டத்தினர் கலந்து கொள்ள வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்கள்.

'கன்னடியர்கள் உங்கள் குரலைக் கேட்கவில்லை' என்று உதட்டிற்கு அசைவு கொடுத்தவர்கள், வெட்கித் தலைகுனியும் விதத்தில்—திரண்டிருந்த மக்களின் இதயங்களிலெல்லாம் லட்சிய முழக்கம் எழும்பிற்று.

கூட்டத்திற்கு ரூ. 920 வசூலாயிற்று; தோழர்கள் முல்லை சத்தி போளூர் சுப்பிரமணியம், மதுரை எஸ். முத்து, சத்தியநாராயணன், பி. எஸ்சி; பி. எல். ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட துணைச் செயலாளர் மா. மன்னர் நன்றி கூற கூட்டம் முடிவடைந்தது.

## தென்பகுதி 'ரயில்வேமென்ஸ் யூனியன்' (பொன்மலை)

(பதிவு எண்: 1647)

தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன் மத்திய நிர்வாகக் குழு விசேட கூட்டம் 4-12-55 விழுப்புரத்தில் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்டவைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1. கூட்டுப் பொதுச் செயலாளர், திரு சச்சிதாநந்தம் தன்னிச்சையாகவும் சர்வாதிகார தோரணையில் நடந்து கொள்வதாலும், பொன்மலை, திருச்சி கிளைகள், யூனியன் கொள்கைக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுவதாகவும், எவ்வளவோ முயற்சித்தும் எதிர்பார்த்த அளவிற்கு அவர்கள் திருந்தவில்லையாதலால் தான் பொதுச் செயலாளர் பதவியினின்றும் விலகிக் கொள்வதாக திரு. வ. வீராசாமி பி. ஏ., எம். பி., அவர்கள் எழுதிய கடிதம் பற்றி விவாதித்தல்.

2. பொன்மலை, திருச்சி, பெரம்பூர் கிளைகள் மீதும், கூட்டுப் பொதுச் செயலாளர் மீதும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி யோசித்தல்.

3. கூட்டுப் பொதுச்செயலாளர்மீது நம்பிக்கையில்லை என்று செங்கல்பட்டு கிளை கொண்டுவந்த தீர்மானம் பற்றி யோசித்தல்.

4. யூனியன் கணக்கு பரிசீலனை செய்தல்.

5. "தொழில் முரசு" இதழை தொடர்ந்து வெளியிடுவது பற்றி யோசித்தல்.

எல்லா கிளை செயலாளர்களும், தலைவர்களும், மத்திய சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் கலந்து கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
சீ. இராகவானந்தம்,
ம. ச. தலைவர்.

## புல்கானின் பேச்சு...

✶ 1-ம் பக்கத் தொடர்ச்சி

சோவியத் தலைவர்கள் எதையும் கூர்ந்து நோக்கும் மனம் கொண்டவர்கள்; தினையைக் காட்டி பனையென்று யாரும் அவர்களை ஏமாற்ற முடியாது!

வடக்கையும் பார்த்தார்கள்; தமிழகத்தையும் பார்த்தார்கள்!

நவம்பர் 28-ம் தேதி சென்னையில் பெரம்பூர் ரெயில் வண்டி உற்பத்தி சாலையைப் பார்ப்பதற்கு முன் அவர்கள் வடக்கே பார்த்த தொழிற்சாலைகளின் பட்டியலை இதோ தருகிறோம்:

1. தேசிய பௌதீக ஆராய்ச்சிக் கூடம்.

2. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம்.

3. பக்ரா நங்கல் அணைத் திட்டம்.

4. பூனாவிலுள்ள வடகான் நெல் பண்ணை.

5. காராக் வாஸ்லாவிலுள்ள மத்திய ஜல மின்சார ஆராய்ச்சிக் கூடம்.

6. உத்தர பிரதேச சர்க்கார் பண்ணை.

7. பம்பாய் அரே பால் பண்ணை.

8. பம்பாய் அணு ஆராய்ச்சிக் கழகம்.

—வட நாட்டிலே திரண்டிருக்கும் இத்தனைத் தொழிற்சாலைகளையும் பார்வையிட்ட புல்கானினுக்குத்தான் தமிழகத்திலே ஒரே ஒரு ஆலையைக் காட்டியிருக்கிறார்கள்!

பெரம்பூர் ரயில் பெட்டிச் சாலையைத் தவிர அவர்கள் பார்ப்பது இங்கு வேறொன்றுமில்லையே—எனவே அதை மட்டும் காட்டினார்கள்!

—அதைப் பார்த்து விட்டுத்தான் கிண்டி ராஜபவனத்திலே புல்கானின் ஏக இந்தியப் பித்தர்களுக்குச் சூடு கொடுத்திருக்கிறார்:

"நாங்கள் சென்னையில் ஒரே ஒரு தொழிற் சாலையைத்தான் பார்த்தோம்"

—தென்னாட்டுக் குமுறலை எதிரொலித்திருக்கிறார் புல்கானின்! 'சுதேசமித்திரன்' தீட்டி, அதை நாம் நாடெங்கும் சுவர்களிலே ஒட்டினோமே, அந்தச் சித்திரத்தின் மூல காரணத்தைப் புரிந்து கொண்டார் புல்கானின்!

"உண்மையை நாங்கள் மறைக்க மாட்டோம்; ஏனெனில் நாங்கள் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் அல்ல" — என்று சொல்லாமல் சொல்கிறது புல்கானின் பிரசங்கம்!

நாம் ஒவ்வொரு கூட்டத்திலும், மாநாட்டிலும் எழுப்பிய குரல் சோவியத் பிரதமர் மூலம் கிண்டி ராஜபவனத்தைக் கலக்கியிருக்கிறது!

பசிகாரன் பிடி அன்னத்திற்காகக் கதறுவானே அதைப் போல மார்ச் 20-ம் தேதியன்று நாம் நாடெங்கும் நடத்திய ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளைத்தான் புல்கானின் கேளாக் காதினருக்கெல்லாம் கேட்கும்படி உரிமைச் சங்கை ஊதியிருக்கிறார்!

அது மட்டுமா?

"(இந்த ஒரு தொழிற்சாலை ஒன்றே) நாங்கள் இந்தப் பகுதியின் தொழில் வளத்தை நினைத்துப் பார்க்கப் போதுமானது!"—('இந்து' செய்தி)

—இதுவும் புல்கானின் வாசகங்கள்தான்!

"அன்று வரை வடநாட்டில் எட்டுக்கு மேற்பட்ட ஆலைகளைப் பார்த்தவர் தென்னாட்டில் ஒரே ஒரு ஆலையைத்தான் பார்த்திருக்கிறார்! அதைத்தான் இப்படி கேலி செய்கிறார், ரஷ்யப் பிரதமர்!

"அங்கே நாங்கள் பார்த்தது எட்டு! இங்கே ஒன்று! நன்று, நன்று—நீங்கள் தென்னாட்டை வளப்படுத்தும் முறை!"—

—கிண்டியில் கூடியிருந்தோரை இப்படியெல்லாம் கிண்டல் செய்வது போலிருக்கிறது புல்கானின் பேச்சு!

பொழிலும், எழிலும் குலுங்கிய பூமி பொலிவிழந்து கிடப்பதைக் கண்டுதான், புகைந்து கொண்டிருக்கும் தென்னகத்தோர் உள்ளக் கிடக்கையை ஒளிக்காமல் வெளியிட்டிருக்கிறார், புல்கானின்!

அகிலும், தேக்கும் விளையும் மண்ணில் அன்றெல்லாம் அன்னியர் வந்தால் இங்கு வரவேற்று பின்னர்தானே வடக்கே அனுப்புவர்; இன்று அந்த நிலை மாறிவிட்டதே!"—என்று நாம் கண்ணீர் வடிக்கிறோமே; அதைப் புரிந்து கொண்டதைப் போல இருக்கிறது புல்கானின் பேச்சு!

புலி வில் கயல் கொடி கொண்டோர் இன்று எலியாக, முயலாக, அடங்கி வாழ்வதை துணிவோடு வெளியிட்டிருக்கிறார் பொதுவுடைமைப் பூங்காவின் தூதுவர். சித்தத்திலே தெளிவின்றி ஏக இந்தியப் பந்தத்திலே கட்டுண்டிருப்போர் அதைத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்!

★


பொங்கல் வாழ்த்திதழ்கள்

முற்றிலும் புதுமை! அரசியல் தலைவர்கள், அழகிய புகைப்பட இயற்கை காட்சிகள், எழில் மிகு வடிவங்களில் அச்சிட்டுள்ளோம்.

சாம்பிள் செட்டுக்கு ரூ. 1
மணியார்டர் செய்யவும்.

நிர்வாகி,
நாமகள் பதிப்பகம்
பீரான்லேன்
திருப்பத்தூர் (வ.ஆ)

# சிறைப் பறவை!




முதன்முதலாக அவன் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டபோது அவனுக்கு வயது பத்து. பால் வடியும் வதனம். அதிலே வறுமையின் கோரக் கோடுகள். ஒட்டிய கன்னங்கள். குழிவிழுந்த கண்கள். பிறந்த நாளிலிருந்து எண்ணெய் கண்டறியா கேசம். தெருப் புழுதி அவன் மேனி எங்கும். மருத்துவ மனையில் ஆராய்ச்சிக்கு எலும்புக்கூடு தேவையேயில்லை; இந்தப்பரிதாபத்துக்குரியவன் நிறுத்தப் பட்டால் போதும்—எல்லா எலும்புகளையும் எண்ணிவிடலாம். இடையிலே ஒரு கந்தல்; அதிலே பல ஒட்டுகள். அவன் கண்கள் மழை பொழியக் காத்துக் கிடந்தன. 'ஜேபடி' அவன் மேல் சாட்டப்பட்டக் குற்றம்.

"உன் பெயர் என்ன?"—நீதிபதி கேட்டார்.

"என் பெயரா? எனக்குத் தெரியாதுங்கோ! எங்க அம்மா என்னை தம்பீன்னு கூப்பிடு வாங்கோ. மத்தவங்கோ டேய், பையான்னு கூப்பிடுவாங்கோ...... "-தழதழத்தக் குரலிலே கூறினான். பயத்தால் அவன் உடல் நடுங்கிற்று.

"உன் அப்பா, அம்மா யார்?"—அடுத்த கேள்வி அம்பு அவன் மேல் தைத்தது. ஒரு முறை நீதி மன்றத்தை நீர் நிறைந்த நயனங்களால் சுற்றிப் பார்த்தான், அந்த கதியற்றவன். சூன்ய வெட்ட வெளிதான் அவன் விழிகளுக்கு விருந்தாயிற்று.

"ஐயா! எங்க அப்பா யாரோ—எங்கு இருக்கிறாரோ -- எனக்குத் தெரியாது. ஊர் கோடியிலேயுள்ள ஆலமரத்தடியில்தான், நானும் எங்க அம்மாவும் இருந்தோம். எங்க அம்மா ரொம்பவும் நல்லவங்கோ. நான் சின்னவனாக இருக்கும் போது, என் கன்னத்திலே முத்தம் கொடுத்து, 'கண்ணு, கண்ணு'ன்னு கொஞ்சுவாங்க. நான் பசியால் அழும்போது, என்னை இறுக அணைத்து முதுகை வருடி விடுவாள். நான் சாப்பிடுவதற்கு நிறைய கொடுப்பாள். எங்கிருந்து, எப்படி கொண்டு வருவாளென்பது எனக்குத் தெரியாது. என்னை ஆலமரத்தடியில் விளையாட விட்டுவிட்டு வெளியே போவாள். திரும்பி வரும்போது மடியிலே தின்பண்டங்கள் இருக்கும். நான் வயிறார உண்பேன். சில சமயங்களில் எல்லா உணவையும் எனக்கே கொடுத்தும் விடுவாள். 'ஏம்மா, நீ சாப்பிடலியா?' என்பேன். 'உன் பசி தீர்ந்தால் போதுமடா கண்ணு — அதுவே என் வயிற்றில் பாலை வார்த்த மாதிரி.' என்று கூறி தண்ணீரைக் குடித்து தன் வயிற்றை நிரப்பிக் கொள்வாள்.

"நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. நானும் வளர்ந்து கொண்டிருந்தேன். எங்க குடிசைக்கு—அதுதான் ஆலமரத்தடிக்கு ஒருவர் வர ஆரம்பித்தார். அவரும் அம்மாவும் ஏதேதோ பேசிக் கொண்டிருப்பார்கள். நான் அம்மாவின் மடியின்மேல் போய் உட்காருவேன். 'இந்தக் குரங்கு ஏன் வந்தது?' என்று கேட்பார் அவர். 'அவனை ஒன்றும் சொல்லாதீர்கள்' என்பாள் என் அன்னை. முணுமுணுத்துக் கொண்டே அவர் போய் விடுவார்.

"ஒருநாள் இரவு திடீரென்று நான் விழித்துக்கொண்டேன். பக்கத்திலே என் தாய் இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன். அங்கே என் அன்னை அங்கமெல்லாம் குலுங்க அழுது கொண்டிருந்தாள். அவர் அம்மாவை வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருந்தார். அம்மா ஏதோ பதில் சொன்னாள். அவர் எட்டி ஒரு உதை விட்டார். 'ஐயோ பாவி' என்று கதறியவண்ணம் சுருண்டு விழுந்தாள். அந்தப்பாவி திரும்பிகூட பாராமல் போய்விட்டான். 'அம்மா, அம்மா' என்று அலறி ஓடினேன். வாயிலே இரத்தம் வழிய, என்தாய் புழுதியிலே புழுப்போல புரண்டுகொண்டிருந்தாள். நான் அழுதேன். என்னைப் பெற்றவளும் அழுதாள். இரண்டொரு நாளில் என்னை அநாதையாக விட்டுவிட்டுப் போய் விட்டாள் என்தாய்.

"தேம்பித் தேம்பி அழுத என்னை தேற்றுவார் யாரும்இல்லை. பசியால் துடிதுடித்த எனக்கு புசிக்க ஒரு கவளம் சோறு கொடுக்க யாரும் முன்வரவில்லை. பசி என் வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. ஆலமரத்தடியை விட்டு நகர்ந்தேன். போவோரை, வருவோரை 'புசிக்க எதாவது கொடுங்கள்' என்று கை நீட்டிக் கேட்டேன். பல்லைக் காட்டினேன் — ஒட்டிய என் வயிற்றைக் காட்டினேன்—என் சோகக் கதையைக் கூறினேன் — கெஞ்சினேன் — அழுதேன்— கண்ணீர் வடித்தேன். நெஞ்சிலே இரக்கம் கொண்டோர் எனக்கு உதவினார்கள். வரண்ட நெஞ்சினர் வசைமொழி பொழிந்தனர். கருணை உள்ளம் பெற்றவர்கள் காலணா, அரையணா கொடுத்தார்கள். காரி உமிழ்ந்தவர்களும் உண்டு! உபதேசம் செய்தவர்களும்ஏராளம். கிடைத்த நேரத்தில் புசித்துவிட்டு, கிடைக்காத நேரத்திலே தண்ணீரால் என் வயிற்றை நிரப்பி, நடைபாதையிலே சுருண்டு படுத்துக் கொள்வேன். பல நாட்கள் பட்டினி கிடந்திருக்கிறேன். பூமிமாதாவின்மீது பசியால் புழுப்போலப் புரண்டு, கண்ணீரால் அவளது மேனியை நனைத்திருக்கிறேன். பிச்சை எடுப்பது—பலரிடம் பல்லைக்காட்டி யாசகம் கேட்பது எனக்குப்பிடிக்கவில்லை. உழைத்து சாப்பிட என் உள்ளம் தூண்டியது. கூலிவேலை செய்ய முற்பட்டேன். என் சக்திக்கு மீறிய வேலைகளையும் செய்தேன். ஆனால் என் உழைப்புக்கேற்ற ஊதியம் யாரும் கொடுக்கவில்லை, மூச்சு திணர மூட்டை சுமப்பேன். ஒரு அணா கொடுக்க முணுமுணுப்பார்கள். சில இடங்களில் வேலை வாங்கிக் கொண்டு, மிரட்டி விரட்டியும் இருக்கிறார்கள்.

"ஒரு நாள் ஆதரவற்ற என் நிலையை எண்ணி கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த நேரத்தில், 'பையா' என்று கூப்பிட்டுக் கொண்டு ஒருவர் வந்தார். கலங்கிய என் கண்களை அவர் பக்கம் திருப்பினேன். 'பையா, அழாதே! உன்னைப் பார்க்க பாவமாக இருக்கிறது, என்னுடன் வா—வயிறாரச் சாப்பிடலாம்' என்றார். 'வயிறார' என்ற வார்த்தை தேன்போல் இனித்தது. பேசாமல் அவருடன் புறப்பட்டேன்.

"அவர்தான் எனக்கு 'ஜேபடி' செய்யக் கற்றுக் கொடுத்தவர். நான் முதலில் தயங்கினேன். பின் பணிந்தேன் அவர் கட்டளைக்கு நான் ஜேபடி செய்யும் பொருள்களை அவரிடம் கொடுத்துவிடுவேன். அவர் எனக்கு உணவு கொடுப்பார். ஒன்றும் கிடைக்காமல் நான் திரும்பினால் என் கன்னங்கள் சிவந்துவிடும். குடித்து விட்டு என்னை அடித்து நொறுக்குவார். கண்ணீரால் என் கவலையை போக்கிக் கொள்வேன் வேலை செய்து என் பசியை போக்கிக் கொள்ளலாமே என்று சிலசமயங்களில் எண்ணுவேன். ஆனால் 'உடல் வளையாமல் நல்லஊதியம் கிடைக்கும் போது, ஏன்உழைக்க வேண்டும்?' என்ற எண்ணம் தலை தூக்கி நிற்கும்.

"இப்படி ஒருநாள் 'ஜேபடி' செய்யும்போதுதான் நான் பிடிபட்டேன். என் முதுகுத்தோலை உரித்துவிட்டார், போலீசார் என்னை இங்கே அழைத்து வந்து விட்டார்கள், ஐயா! என்னை சிறைக்கு அனுப்பப் போகிறீர்களா?" அவனது விழிகள் நீர் வீழ்ச்சிகளாயின.

அந்த குற்றவாளி இளங் குற்றவாளிகளின் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். எட்டு ஆண்டுகள் அந்த இருட் குகையிலே கழித்தான். தறி ஆட்டவும், 'பாவு' போடவும் கற்றுக் கொண்டான் சிறைப்பள்ளியில்!

பதினெட்டாவது வயதில் மீண்டும் அவன் இந்தப் பரந்த வையகத்தில் நடமாட ஆரம்பித்தான். சிறைச்சாலை தந்த பாடம் அவனை உழைக்கத் தூண்டியது. உழைத்து மற்றவர்களைப் போல உலகிலே உலாவ அவன் உள்ளம் விரும்பியது. சிறைச் சாலையிலே கற்றுக் கொண்ட தொழில் தனக்கு ஒரு வழிச் செய்யும் என்று எண்ணினான். நெசவுத் தொழில் கசந்து போன தன் வாழ்வை இனிக்கச் செய்யும் என்றெல்லாம் கனவு கண்டான். தறி வாங்க அவன் கையிலே பொருள் இல்லை. தறி வைத்திருந்தவர்கள் அவனுக்கு—முன்பின் அறிமுகமில்லாதவனுக்கு—சிறைச் சாலையிலிருந்து திரும்பியவனுக்கு—கொடுக்க மறுத்து விட்டார்கள். அவன் போகாத இடமில்லை; கேட்காத ஆள் இல்லை; ஆனால் அவனது அவலக் குரலைக் கேட்க யாரும் தயாராக இல்லை. தெருத் தெருவாக அலைந்தான், நாயைப் போல! வீடுவீடாக ஏறி இறங்கினான், பிச்சைக்காரனைப் போல! ஆனால் அவன் வாழ்வுக்கு வழி கூற ஒருவரும் இல்லை. 'திருட்டுப் பயலுக்கு இடமில்லை' என்ற குரல்தான் எங்கும் அவனுக்குப் பதிலாகக் கிடைத்தது. திருடன்!...திருடன்!!...திருடன்!... — இதயத்தை தேள் கொட்டுவது போலிருந்தது அவனுக்கு.

ஆயிரம் வேல்கள் அவன் விலாவைத் தாக்கின. போக்கிடமின்றி—தன் கவலையைப் போக்க மார்க்கமின்றி — வயிற்றுப் பசியைப் போக்க வழியின்றி—விழிகளை குளமாக்கி அலைந்துகொண்டிருந்தான். நிலை குலைந்துபோன தன் வாழ்வை எண்ண எண்ண அலை வீசிற்று அவன் உள்ளத்தில். புயல்-பூகம்பம்-சூறாவளி-மாறி மாறி வீசிற்று அவன் மனதில்.

இருளைக் கிழித்து வான வீதியில் வலம்வரும் கள்ளமில்லா வெள்ளி நிலவைக் காண்பான் — இருண்டு போன தன் வாழ்வு வானில்,என்று நிலவு உதயமாகும் என எண்ணுவான். கண் சிமிட்டும் விண்மீன்களைக் காண்பான்—தன் வாழ்வில் மின்னும் தாரகைகள் தோன்றுவது எந்நாளோ என ஏங்குவான். வசந்தம் வீசுமா? வாழ்வு வளம் பெறுமா? வாழ்வா? சாவா? இவை அவன் மனதிலே மோதிய அலைகள்.

ஒருநாள் அவனது சிறைக்கூடத்து சகா ஒருவனை சந்தித்தான். இருவரும் உள்ளங்களை மாற்றிக்கொண்டனர். வாழ வழியில்லாமல் வாடுவதையும், உலகம் தன்னை 'திருடன், திருடன்' என்று சொல்லி கைகொட்டிச் சிரிப்பதையும்; ஒழுங்காக உழைக்க வேலை தர யாரும் முன்வர வில்லை என்றும் கூறி கண்ணீர் விட்டான். அவனது நண்பன் சிரித்தான்.

"யாரும் வேலை கொடுக்கவில்லை என்றால் நாமே ஒரு தொழிலைத் துவக்குவோம்" என்றான் அவனது நண்பன்.

"என்ன தொழில்...?"

"குடிசைத் தொழில்......"—இடிஇடியென சிரித்தான்.

ஆமாம்! இருவரும் குடிசைத் தொழிலை ஆரம்பித்தார்கள். நண்பன் உற்பத்தியைக் கவனித்துக் கொண்டான்; இவனே அதை விற்கும் 'ஏஜண்ட்' ஆனான். கையிலே காசு புரள ஆரம்பித்தது. கவலையை மறந்தான். அவன் கண்கள் கலங்கவில்லை. தன்னை வாழ விடாமல் விரட்டி விரட்டி அடித்த வையகத்தைக் கண்டு சிரித்தான். தன்னைத் திருடனென்று துரத்திய இருதயமற்றவர்களைக் கண்டு சிரித்தான். வையகத்தில் வாழக் கற்றுக் கொண்டோமே என்று எண்ணி மகிழ்ந்தான்.

சிறைச்சாலையை விட்டுவந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டான். இம்முறை அவன் மேல் சுமத்தப்பட்ட

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்




**சென்ற இதழில்.....**

மாயாண்டியைத் தேடி வீடு நோக்கிவரும் அம்பலத்திடம், அவரது வீடு கொளுத்தப்பட்ட செய்தி வருகிறது. ஓடுகிருர். தாண்டவன், வீடு எரிவதைப் பார்த்து கேலி புரிகிருர். ஆத்திரமடைந்த அம்பலம், தீயை அணைக்காமல் வேடிக்கை பார்க்கும் ஊர் மக்கள்மீது பாய்கிருர் ஊர் ரகளைப் படுகிறது. முரடர்கள், வீடுகளைச் சோதனையிட்டு மாயாண்டியைத் தேடும்போது தாண்டவன் வீட்டில் ஒளிந்து கொண்டிருக்கும் துரையும், பரிமளாவும் வெளிப் படுகின்றனர் முரடர்களுக்கு பயந்தோடும் ஊர் மக்களை உற்சாகப்படுத்தி, அவர்களை எதிர்த்து நிற்குமாறு துரை தூண்டிவிடுகிருன். இரு சாராருக்கும் கைகலப்பு ஏற்படுகிறது. அப்போது மாயாண்டியும், தாண்டவனும் ஒரு ரேக்ளாவில் ஏறிக் கொண்டு, மனோரா நோக்கிப் பறக்கிருர்கள். அம்பலம் இன்னொரு ரேக்ளாவில் அவர்களைத் தொடருகிருர். துரையும், பரிமளாவும் மற்ருெரு ரேக்ளா வண்டியில் மனோரா நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

**50**

## கடலுக்கடியிலே!

கிழக்கு வெளுக்க ஆரம்பித்து விட்டது. மனோராவிற்கு அருகே கரையை நனைத்துக் கொண்டிருக்கும் கடல் அலைகளின் பக்கம் மாயாண்டிக் கிழவரின் ரேக்ளா வந்துநின்றது. தாண்டவனும் அவரும் பரபரப்போடு கீழே இறங்கினுர்கள். கரையோரத்திலே ஒரு சிறு படகு ஆள் யாருமின்றி நின்று கொண்டிருந்தது. மாயாண்டி, அந்தப் படகிடம் ஓடினுர். ஒருக்கணம் யோசித்தார். பிறகு அதில் ஏறிஉட்கார்ந்து கொண்டார். அந்தச் சிறிய படகுக்கேற்ற துடுப்பும் அதிலேயே இருந்தது.

"தாண்டவா! இது துரை, பரிமளாவுக்காக காத்திருக்கும் படகு! பரவாயில்லை—அவர்கள் எப்படியும் ஆனந்தன் உதவியால் தப்பிவிடுவார்கள். இப்போது அவசரமான காரியம் என் உயிர் பாதுகாக்கப்பட வேண்டியது தான்! சரி; நான் புதுப்பட்டினம் போகிறேன்—பரிமளா, துரை ஜாக்கிரதை!" என்று கூறியவாறு மாயாண்டி படகை செலுத்த ஆரம்பித்தார்.

கரையிலே நின்று கொண்டிருந்த தாண்டவனின் காதில் ரேக்ளா வண்டி வரும் சப்தம் கேட்கவே, அவர் மாயாண்டியை நோக்கி, "சீக்கிரம்! சீக்கிரம்!" என்று எச்சரித்தார். மாயாண்டியும் படகை வேகமாக செலுத்தத் தொடங்கினுர்.

தூரத்தில் அம்பலத்தின் வண்டி வருவது கண்ட தாண்டவன், ரேக்ளாவை இழுத்து மறைவாக நிறுத்திவிட்டு, தானும் ஒரு இடத்தில் மறைந்து கொண்டார்.

படகிலே செல்லும் மாயாண்டி அம்பலத்திடமிருந்து தப்பி விட்டோம் என்ற பெருமூச்சோடு, தன் மடியை அவிழ்த்துப் பார்த்தார். பலநாட்களாக அவர் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் புதையல் ரகசியத்தை மகிழ்ச்சியோடு கண்களிலே ஒத்திக் கொண்டார்.

"நீ தப்பிவிட்டாய்! பேராசைக்காரனிடமிருந்து நீ மட்டுமல்ல; துரை, பரிமளா இருவரும் தப்பி விட்டார்கள்! எல்லாமே உன் சக்திதான்! உன்னை நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தக் கூடிய நல்லவர்கள் பலர் எனக்குக் கிடைத்து விட்டார்கள். உன் மூலம் புதைந்து கிடக்கும் தங்கப் பாளங்களை எடுப்பேன்—வரண்டு கிடக்கும் குடும்பங்களிலே வளம் உண்டாக்குவேன். என்னுடைய இலட்சியக் கனவு ஈடேறும் காலம் வந்துவிட்டது." என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் கிழவர். படகில் இருந்தபடியே மனோராவை அண்ணாந்து நோக்கினுர்.

அந்த மனோராவின் உச்சியிலே நின்று கொண்டு ஒருநாள், ஆகாயத்தில் மேயும் மேக மந்தைகளை நோக்கி, "மேகங்களே! உங்கள் சாவுக் கண்ணீர் மாநிலத்தை வாழ வைக்கவும் உதவுகிறது. சில சமயம் அழிக்கவும் உதவுகிறது. ஆனாலும் உங்கள் சாவுக் கண்ணீர் வாழ்க! அதுபோல என் சாவுக் கண்ணீர் யாரையும் வாழ வைக்காதா?" என்று அவர் ஏக்கக் குரல் கிளப்பினுர். அப்போதெல்லாம், எப்படியாவது அந்தப் புதையல் ரகசியத்துடன் வெளி நாட்டுக்கு ஓடிவிட வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது. கொடியோன், சுயநலக்காரன், பேராசை பிடித்தவன் — அனைவருமே புதையல் ரகசியம் அறியத் துடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கையிலே அது சிக்கி விட்டால், தன்னுடைய லட்சியம் நிறைவேருது என்று மாயாண்டிக்கு பயம். அதனுல் அது யாருடைய கையிலும் கிடைக்க வேண்டாம்; தான் சாவதற்குள் தன் லட்சியம் பலிக்க ஏதாவது வழி கிடைக்குமா என்று காத்திருக்கலாம்; அதுவரை புதையல் ரகசியத்தைக் காப்பாற்றி வைத்திருக்க இந்த நாடு வசதியில்லை, என்கின்ற தீர்மானங்களோடுதான் அவர் கள்ளத்தோணி மார்க்கமாக இலங்கை செல்ல ஆயத்தமானுர்.

அதற்குள்தான் இத்தனை புயல்கள் மாறி மாறி அடித்துவிட்டன. அதையெல்லாம் நினைத்துக் கொண்டு, புதுப்பட்டினம் நோக்கி படகை செலுத்திக் கொண்டிருந்த கிழவரின் கண்களிலே கரை யோரத்திலே அம்பலத்தின் ரேக்ளா வந்துநிற்பது தெரிந்தது.

அம்பலம் கோபாவேசமாக வந்து இறங்கியதைக் கண்ட தாண்டவன், நன்ருகப் பதுங்கிக் கொண்டார். அம்பலத்தின் கையிலேயிருந்த பளபளப்பான கத்தி வேறு தாண்டவனைப் பயமுறுத்தியது. அம்பலம், மாயாண்டிக் கிழவரைக் கூவி அழைத்து, "நில்! நில்!" என்று கத்தினுர். கிழவரின் படகும் அதிக தூரம் போகாத காரணத்தால், அம்பலத்தின் கூச்சல் அவர் காதிலே விழுந்து கொண்டுதானிருந்தது. அம்பலம், கடலிலே இறங்கி, கிழவரின்படகு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

> "எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
> காக்கை மூக்கு நிழலிலே...
> கள்வர் புகும் வழியிலே...
> கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
> எழுபது கோடி பசும்பொன்..."

கிழவருக்கு அச்சம் பிறந்தது. அம்பலம், நடந்தே தன் படகிடம் வந்துவிட முடியுமா என்று யோசித்தார். கையிலேயிருந்த துடுப்பை கடலுக்குள் செங்குத்தாக செலுத்திப் பார்த்தார். ஏறத்தாழ ஒரு ஆள் உயரத்துக்குக் குறைவான ஆழத்திலேதான் அவர் படகு போய்க் கொண்டிருந்தது என்பதை உணர்ந்து திடுக்கிட்டார். அம்பலம், கடலில் நடந்துவருகிருேம் என்பதையே மறந்துவிட்டு கிழவரை நோக்கி வந்து கொண்டிருந்தார், எரியும் கண்களோடு!

கிழவர், சக்தி முழுதும் பிரயோகித்து படகை செலுத்தினுர், மார்பளவு தண்ணீரில் நடந்து கொண்டிருந்த அம்பலம், மாயாண்டி—கைக் கெட்டாத தூரத்திற்குப் போய்விட்டார் என்பதை உணர்ந்தார். இனியும் நடந்தால் முழுகிவிடுவோம் என்பது தெரிந்துவிட்டது.

மாயாண்டியும், படகை இப்படியும் அப்படியுமாக செலுத்தி அம்பலத்திற்கு அகப்படாதவாறு போக்குக் காட்டினுரே தவிர, அம்பலத்திடமிருந்து விடுபட்டு அதிக தூரம் போய்விட முடியவில்லை. அம்பலம், கிழவரைப் பார்த்து "மரியாதையாகத் திரும்பி விடு!" என்று கத்தினுர்.

"உன் மிரட்டல்களுக்கு நான் பயப்படமாட்டேன். அம்பலம்! நீ ஆடிய ஆட்டமெல்லாம் போதும்! இனிமேலாவது அறிவோடு நடந்து கொள்! காட்டு ராஜா தர்பார்கள் அதிகநாள் நீடிப்பதில்லை! நான் உன்னை ஏமாற்றிவிட்டேன் என்றுதானே இவ்வளவு ஆத்திரப் படுகிருய்—நானு உன்னை ஏமாற்றினேன்? இல்லையப்பா இல்லை! நீயே தான் ஏமாந்தாய்! அந்த ஏமாற்றத்திலும் உன்னை அறியாமல் சிலநல்ல காரியங்கள் செய்திருக்கிருய்— என்ன திகைக்கிருய்? நாமாவது நல்ல காரியம் செய்வதாவது என்று ஆச்சரியப்படுகிருயா? பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலே புதையலுக்காக நீ தோண்டிய கிணறு ஊர்மக்களுக்குப் பயன் படுமல்லவா?" என்று சிரித்தார் கிழவர்.

இதைக் கேட்டதும் அம்பலம் வெகுண்டு—"கிணறு! அதை நாளைக்கே பாழாக்கிவிடுகிறேன்!" என்று உறுமினுர்.

"அம்பலம், கிணற்றைப் பாழாக்கிவிடுவாய்—ஆனுல் நீ செய்திருக்கிற மற்ருெரு நல்ல காரியத்தை மறுபடியும் நீயே நாசமாக்க முடியாது! பரிமளாவுக்கும் துரைக்கும் திருமணம் செய்துவைத்தாயே

அதைத்தான் சொல்லுகிறேன் காரியம் சாதிப்பதற்காக வேண்டி நல்லவர்கள், சில சமயங்களில் தீயவழியில் பிரவேசிப்பதுண்டு.

அதுபோல. தீயவர்களும் நல்ல காரியங்கள் செய்து தீரவேண்டிய நெருக்கடிக்கு ஆளாவது உண்டு! அதே நிலைமையில் நீயும் மிகச் சிறந்த நல்லகாரியத்தை செய்து முடித்திருக்கிருய். கருத்தொருமித்த இரு காதலர்களை இணைத்து வைத்து அவர்களைத் தம்பதிகளாக்குவதென்ருல் சாதாரணமா? நீ செய்திருக்கிற 'பாபங்'கள் அனைத்துக்கும் பரிகாரம் தேடுகிற 'புண்ய' காரியமல்லவா அது!'' என்று சொல்லிவிட்டுக் கிழவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே படகையும் செலுத்திஞர்.

''காதலர்கள்! திருமணம்! நல்ல காரியம்! ஏ கிழவா! அவர்கள் கதியை நாளைக்குப் பார்!'' என்று ஓங்காரக்கூச்சலிட்டார் அம்பலம்.

''வீணே கத்தாதே! வருகிறேன்!''என்று கூறிவிட்டு படகை வேகமாக செலுத்த முனைந்தார் கிழவர். அவருக்கு திகில் அடங்கவில்லை. தான் படகில் இருக்கிருேம், அம்பலம் தண்ணீரில் இருக்கிருர் என்ற ஒரே ஒரு தைரியத்தில் மட்டுமே அவரால் துடுப்பை அசைக்க முடிந்தது.

அம்பலம், கிழவர் போகும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தார். ஆளைக்கையோடு பிடிக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட அம்பலம், கையிலுள்ள கத்தியை எடுத்தார். ஆத்திரமனைத்தையும் ஒன்று சேர்த்து, மாயாண்டியை நோக்கி கத்தியை வீசினுர். மாயாண்டிக் கிழவரின் விலாப்புறத்திலே கத்தி வேகமாகப் பாய்ந்தது. 'ஆ!' என அலறிய மாயாண்டி, படகில் இருந்த புதையல் ரகசியத்தைக் கையிலே எடுத்துக் கொண்டார். துடுப்பு கடலிலே விழுந்தது. விலாப்புறத்திலே பாய்ந்த கத்தியோடு மாயாண்டி அப்படியே படகில் சாய்ந்தார். புதையல் ரகசியத்தைப் பிடித்திருந்த—கை, படகிற்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது.

''துரை! பரிமளா! துரை! பரிமளா!'' என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன. அலையிலே படகு ஆடிற்று. மாயாண்டியின் பிரக்ஞை தவறிற்று. கண்கள் மூடிக் கொண்டன. இலட்சியக் கனவுகளுக்கு அஸ்திவாரம் போட்டுக் கொடுத்த இருதயம், தன் வேலையை நிறுத்திக் கொண்டது. ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் தலை, தாழ்ந்தது. மாயாண்டி, பிணமாஞர். அதை அறிவிப்பதுபோல் அவர் பத்திரமாகக் கட்டிக் காத்த புதையல் ரகசியம், அவர் கையைவிட்டு நழுவி, கடலுக்கடியிலே போய்ச் சேர்ந்தது. சாகிற நேரத்திலேகூட, அம்பலத்தின் விஷயத்திலே அவர் ஜாக்கிரதையாக இருந்து புதையல் ரகசியம் அம்பலம் கையிலே கிடைத்துவிடாமல் கடலின் மடியிலேஅதை சமர்ப்பித்து விட்டார்.

படகிலே மாயாண்டி பிணமாச் சாய்ந்த காட்சியை அம்பலம் க் கண்களோடு பார்த்துக் காண்டு நின்ருர். தாண்டவன், கிழவரின் சாவைப் பார்த்துங்கூட, துவும் செய்ய முடியாமல் கண் லங்கியபடி நின்றுகொண்டிருந்தார். கம்பீரமாக நின்றுகொண்டிருந்த மனோராவின் உச்சியிலேயிருந்து கிழவரின் குரல் எதிரொலிப்பதுபோல் தெரிந்தது.

வெற்றிகரமான 2-வது வாரம்

மு. கருணாநிதி எழுதிய புதிய நாடகம்

குடியாத்தம் ராஜா தியேட்டரில்

3-12-55 சனி முதல் தினசரி இரவு 10 மணிக்கு

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

மணி மகுடம்

பிரதி ஞாயிறுதோறும் மாலை 6-45 மணிக்கு
திங்கள்தோறும் விடுமுறை.

கட்டணம்: ரூ. 2, 1-8-0, அணு 12, 9, 6.
பெண்கள் தரை அணு 4.

''ஓ! ஆகாயத்தில் மேயும் மேக மந்தைகளே! உங்கள் வாழ்நாள் சதமென்று எண்ணியிருக்கிறீர்களா? குளிர்ந்த காற்றுதான் உங்கள் எமன் என்பதை மறந்து விடாதீர்கள். மேகங்களே! உங்கள் சாவுக் கண்ணீர், மாநிலத்தை வாழவைக்கவும் உதவுகிறது சில சமயம் அழிக்கவும் உதவுகிறது. ஆனுலும் உங்கள் சாவுக் கண்ணீர் வாழ்க! அதுபோல என் சாவுக் கண்ணீர், யாரையும் வாழவைக்காதா என ஏங்குகிறேன். மேகப் பிராணிகளே! உங்கள் சாவுக் கண்ணீரின் சக்தியை இந்த ஏழை மனிதன் சாவுக் கண்ணீருக்குத் தாருங்கள்—உம்—சீக்கிரம்! அந்த குளிர் காற்று வீசுவதற்குள்! உடனே! உடனே!''

கிழவரின் பிணத்தின் மீது குளிர் காற்றுத்தான் வீசிக்கொண்டிருந்தது. ஆனுல் அவரது ஆசைப் பொக்கிஷம், சாவுக் கண்ணீரால் நனைந்து, கடல் தண்ணீருக்குள் அமிழ்ந்துவிட்டது. அவரது பெருந் தூக்கத்திற்கு துணை புரிவதுபோல் கடல்மாதா, அலைக் கரங்களால், அந்தப்படகுத்தொட்டிலை அசைத்துக் கொண்டிருந்தாள்.

''மாயாண்டி தொலைந்தான்'' என்ற களிப்போடு, அம்பலம், கரை நோக்கித் திரும்பினுர். துரையும், பரிமளாவும் ரேக்ளாவில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் தாண்டவன் ஓடினுர்.

அம்பலத்தின் உள்ளத்திலே பழிவாங்கும் உணர்ச்சி குமுறியெழுந்தது. 'அகப்பட்டீர்களா?' என்று கத்திக் கொண்டே, கரை நோக்கி நடந்தார். துரையிடம் ஓடிவந்த தாண்டவன், ''மாயாண்டியைக் கொன்று விட்டான்!'' என்று கத்தினுர். துரையும் பரிமளாவும் 'அய்யோ!' என அலறித் துடித்தனர்.

அம்பலம், அவர்களை நோக்கி வேகமாக நடந்தார். மூவரும், கரையில் நின்றபடி அம்பலம் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மூவருக்கும் பின்னுல் நாலைந்து ரேக்ளா வண்டிகள் வந்து நின்றன. அவைகளிலேயிருந்து சுமார் இருபது முரடர்கள் இறங்கினுர்கள். அவர்கள் இம்மூவரையும் முற்றுகையிட்டது போல சுற்றிக் கொண்டார்கள். அம்பலம், ஆனந்தப் பரவசத்தோடு, 'விடாதே! விடாதே!' என கத்திக் கொண்டே, கடல் நீரில் நடந்து வந்து கொண்டிருந்தார். 'கடைசியாக அனைவருமே சிக்கிவிட்டோம்''—என்று கண்கலங்கியபடி கூறினுர் தாண்டவன். திடீரென அனைவரின் கவனத்தையும் கவரும் விதத்திலே. கார் வரும் ஒலிகேட்டது. கார் வெகு வேகமாக வந்து கரையோரத்திலே நின்றது. அதிலேயிருந்து பத்துக்கு மேற்பட்ட போலீசாரும், அதிகாரிகளும் இறங்கி வந்தனர். ஆனந்தனும் அவர்களோடு வந்தான். ராமனும் இருந்தான். போலீசாரைக் கண்ட முரடர்கள் சிதறி ஓடினுர்கள். ஆகாயத்தை நோக்கி வேட்டுச் சப்தம் கிளம்பியது. முரடர்கள் அனைவரும் சரணுகதி அடைந்தார்கள். கரை நோக்கி நடந்துவந்த அம்பலம், மீண்டும் கடல் நோக்கி நடக்க ஆரம்பித்தார். போலீசார் அவரைச் சூழ்ந்து வளைத்துப் பிடித்துவிட முயன்ருர்கள்.

''வெள்ளியம்பலம்! வாரும்! வாரும்!'' என்று ஆசை வார்த்தை கூறி அழைத்துப் பார்த்தார்கள். அம்பலம் கேட்கவில்லை. கடல் நோக்கி நடந்து கொண்டேயிருந்தார்.

அவரை விட்டுடுங்க—எங்க எஜமானுக்கு நீந்தத் தெரியாது—எப்படியும் திரும்பிடுவாரு!'' என்று கேலியாகக் கத்தினுன் வேலைக்கார ராமன்.

அம்பலம் திரும்பாதது கண்ட போலீசார், அவரைக் கரைக்கு அழைத்துவர வேண்டுமென்ற நோக்கத்தோடு பின் தொடர்ந்தனர் வேகமாக! அம்பலமோ அவர்களை விட வேகமாகக் கடல் நோக்கி நடந்தார். போலீசாரிடம் சிக்குவதைக் காட்டிலும் கடலில் மறைந்து விடுவதை மேலாகக் கருதினுர் போலும். அம்பலத்தின் முழு உடலையும் கடல் மறைத்துக் கொண்டது. அவரைத் தேடும் முயற்சியிலே போலீசார் ஈடுபட்டனர். உயிரற்ற மாயாண்டியை ஊஞ்சலாட்டிக் கொண்டிருக்கும்படகைக் கரைக்குக் கொண்டுவந்தனர். அமைதி தவழும் கிழவரின் முகத்திலே முகத்தைப் பொருத்திக் கொண்டு துரையும் பரிமளாவும் அழுதனர். கிழவரின் மடியிலேயிருந்து ஒரு காகிதச் சுருளை போலீஸ் அதிகாரி எடுத்தார். அதை அங்கேயே படித்தார்.

[வளரும்

# பொங்கல் மலர்

# 1956.

★

## சிறுகதைப் போட்டி விபரம்

★ மூன்று சிறந்த சிறுகதைகளுக்கு பரிசு வழங்கி, அவைகளை வருகிற பொங்கல் மலரில் வெளியிடவும் தீர்மானித்துள்ளோம்.

★ முதல் பரிசு ரூ. 100; இரண்டாவது பரிசு ரூ. 75; மூன்ருவது பரிசு ரூ. 50—வெற்றி பெற்றவர்க்கு பொங்கலன்று பரிசுத் தொகை கிடைக்கும்.

★ பரிசு பெருவிடினும் வெளியிடத் தகுதியிருப்பின் அவைகள் வார இதழில் பிரசுரிக்கப்படும்.

★ எழுத்தாளர்களுக்கு:

★ சிறுகதை கூடிய அளவில் சிறுகதையாகவே இருக்க வேண்டும்.


★ கதைகள் தெளிவாக ஒரு பக்கத்தில் எழுதப்பட வேண்டும்.

★ கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய அஞ்சல் தலைகள் அனுப்ப வேண்டும்.

★ போட்டிக்குரிய எல்லாக் கதைகளும் டிசம்பர் 15-ம் தேதிக்குமேல் கவனிக்கப்பட மாட்டாது.

★ கதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி;

சிறுகதைப் பகுதி,
முரசொலி,
சென்னை-6.




## திரை மறைவில்!

சிவகாசி
11-11-55

அன்புள்ள ஆசிரியருக்கு,

தொழிலாளர்களிடையே தங்கள் கட்சி செல்வாக்கை உண்டு பண்ணி தொழிற்சங்கங்களில் ஆதிக்கம் செலுத்திவரும் கம்யூனிஸ்ட்டுகள் — உண்மையிலேயே எந்த அளவிற்கு தொண்டு புரிந்து வருகிறார்கள் என்பதை, மக்கள் உணர்ந்து வருகிறார்கள்!

கடந்த சில திங்களுக்கு முன், சத்திரப்பட்டி, 'சூர்யப் பிரகாசா கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தில், நடந்த ஒரு மோசடியை—மக்களின் முன் வைக்காமலிருக்க முடியவில்லை.

'உற்பத்தி செய்த அடக்க விலைக்கும், விற்பனை செய்த விலைக்கும் இடையில் —இலாபமாகக் கிடைத்த பெரும் தொகை மோசடி செய்யப்பட்டிருக்கிறது' என்றும், "இருப்புச் செய்து வந்த ரொக்கத் தொகையில், ஏறத்தாழ நானூறு ரூபாய் மோசடி செய்யப்பட்டிருக்கிறது—என்றும், அந்தச் சங்கத்தின் நிர்வாகக் குழுவினரே தெரிவித்துள்ளனர்.

அந்த கூட்டுறவு சங்கம் துவக்கப்படுவதற்கு கம்யூனிஸ்ட்கள்—பட்டபாடும்—செய்த போலிப் பிரச்சாரமும் எதற்காக என்பது, மேலே குறிப்பிட்டிருக்கும் மோசடிகளைச் செய்து தங்கள் சுயநலத்திற்கு, நிலையான வழி தேடிக் கொள்ளத்தானா? இப்படி கேட்க துணிந்து விட்டார்கள் ஊர் மக்கள்.

ஆனால், பதில்கூற முடியாத நிலை!!


இவர்கள்தான் கேட்கிறார்கள், "தி. மு. கழக தோழர்கள், நெசவாளர்களுக்காக சாதித்தது என்ன?" என்று!

உண்மைதானே!...

கம்யூனிஸ்ட் தோழர்களின் இது போன்ற 'சாதனை'களில், தி. மு. கழகத்தவர் ஈடுபட்டதாக எவரும் காட்டியதுமில்லை; இனியும்காட்ட முடியாது!

இந்த ஒன்றுதானா? இதைப் போன்று இன்னும், 'தோழர்கள்' நடத்தும் சோக நிகழ்ச்சிகள் எத்தனையோ நாட்டிலே மலிந்து கிடக்கின்றது; அவை அனைத்தும் ஏட்டிலே வர இன்னும் அதிக நாள் இல்லை!

சி. பி. அண்ணாமலை




✶

## சிரிப்போடு சிந்தனை!

திண்டுக்கல்
21—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தினார்கள் என்ற செய்தி கேள்விப் பட்டதும் என் மனம் மகிழ்ந்தது.

மேல் நாட்டில், 25 படத்திலோ 50 படத்திலோ ஒரு நடிகன் நடித்துவிட்டால், அந்த நடிகனுடைய வாழ்க்கை வரலாறு படமாக எடுக்கப் படுகிறது. அந்தப் படத் தயாரிப்புக்கு 'நான்—நீ' என்று படத் தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஈடுபடுகிறார்கள். ஆனால் இந்த நாட்டிலோ நடிகன் என்றால் அவனை கவனிப்பதே கிடையாது. நூற்றுக்கு மேற்பட்ட படங்களில் நடித்த நடிகர் இந்தியாவில் கலைவாணர் ஒருவர்தான். இவருடைய நகைச் சுவையை கவனித்தால் புதிய கருத்துக்கள் நிறைந்திருக்கும்.

'சிரியுங்கள்! சிரியுங்கள்! சிரித்துக் கொண்டே இருங்கள்!! அப்பொழுதுதான் வியாதி வராது' என்று ஒரு டாக்டர் கூட கூறியிருக்கிறார். ஆகவே, சிரிக்க வைப்பதோடு மட்டுமல்ல, பின் சிந்திக்கவும் வைக்கும் கலைவாணர் ஒரு பெரிய மருத்துவர்தான்!

சுவிட் சுப்புராயலு.

★

## தென்னாட்டின் 'சார்லி'!

மதுரை,
21—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

தங்கள் 11—11—55 'முரசொலி'யில், 'தென்னாட்டின் சார்லி' என்ற கட்டுரை கண்டு உள்ளபடியே உவகை கொண்டோம். தென்னகத்து நகைச் சுவை வேந்தன் என். எஸ். கிருட்டிணன் அவர்களுக்கு கடந்த மாதம் தென்னிந்திய நடிகர் சங்கத்தார் கலையுலகின் சார்பில் பொன்னாடை அணிவித்து ஊக்கிவித்தது.

'முரசொலி'யும் இவ்வரிய பணியில் பங்கு கொள்ளத் தவறாது, கலைவாணரது எழில் உருவை அமைத்தது. போற்றத் தக்கது. "தென்னாட்டின் சார்லி" எனப் பெயர் இட்டுப்புகழ்ந்தது. அவரது நாட்டுப் பற்றையும், சமுதாயப் பணியினையும், நல்ல இதயத்தினையும், பிறர் மாட்டு அவரது அன்புடைமையையும் ஒருங்கே தொகுத்து முரசொலி தமிழ் அன்பர்களுக்கு அளித்த செயல், அது ஆற்றிவரும் பல செயற்கரிய செயல்களில் ஒன்றாகும்.

எஸ். என். சின்னநாகையன்,
தியாகராசர் கல்லூரி.

★

## திருத்தம் தேவை!

பெரம்பூர்,
15—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

தற்பொழுது எங்கும் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற பிரச்சனை இருந்து வருகிறது. இந்த சமயத்தில் தமிழர்களே தமிழைக் கொலை செய்துக் கொண்டு வருகின்றனர். உதாரணமாக, பெரம்பூர் அஞ்சல் அலுவலகத்தில் தொங்கவிடப்பட்டுள்ள பலகையில் "தபால் பில்லைகள்" என்று எழுதுவதற்கு பதிலாக "தபால் பிள்ளைகள்" என எழுதியுள்ளனர், இது தமிழர்களுக்கு அவமானத்தை உண்டுபண்ணக் கூடியதாகும். இப்படிப்பட்ட சிறு பிழைகளால் தமிழுக்கு பங்கம் நேரிடக் கூடும். ஆகையால் அப் பிழையை உடனே மாற்றியாக வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

—கோ. தேவராசன்.

## கடிதக் குறிப்புகள்.

வி. எம். சாமிநாதன், (மாங்காடு) என்னும் தோழர், சென்னை சட்டசபையில் மொழிவழி மாநில அமைப்பு குறித்து ஓட்டெடுப்பு நடைபெறும் பொழுது, ஊமையாக முடங்கிப் போன, தென்னாட்டு கம்யூனிஸ்டுகள், தமிழர்களின் நன்றிக்கு உரியவர்கள் என்றும், காரணம், இத்தனை நாட்களாக, மயக்கு மொழி பேசிவந்த அவர்கள், தங்கள் 'உண்மையான சொரூபம்' எது என்பதைக்காட்டி தமிழர்களுக்கு பாடம் கற்பித்து விட்டார்கள் என்றும்: இனி தமிழர்கள் மத்தியிலே ஓட்டுப் பிச்சைக்கு வர முடியாது என்றும் எழுதியுள்ளார்.

✶

டி. வி. பொன்னையன் (தோடனேரி) என்ற தோழர், மதுரைக்கு அருகிலுள்ள பரவை பஞ்சாயத்துக்குட்பட்ட எல்லையில், ஒரு பஞ்சாலை கட்டிட வேலை நடைபெறுவதாகவும், அங்கு மேற்பார்வையாளராக அமர்த்தப்பட்டிருக்கும் ஆரியர் ஒருவர், பணியாற்றிக் கொண்டிருந்த ஆரியரல்லாத தோழர்களை நீக்கிவிட்டு, ஆரியர்களாகத் தேடிப் பிடித்து வேலை தருவதாகவும்; அதோடு, வேலையாட்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுக்க முடியுமோ, அவ்வளவையும் கொடுத்து வருவதாகவும், கட்டிட வேலையின் போதே 'அவர்களி'ன் ஆதிக்கம் என்றால், பஞ்சாலை துவக்கியபின் என்னிலையோ? என்று வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார். ஃ

## பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

படுத்துக் கிடந்த தங்கம். அம்பிகையின் ஒட்டியாணம்! அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் அடுத்தகணம், "ஐயோ, திருடன்! திருடன்!!" என்று சொல்லிக் கொண்டே ஓடிவந்தார் சங்கரப் பத்தர். மறைத்துக் கொள்ள உதவிய மேல் துண்டை எங்கேயோ வீசி எறிந்துவிட்டு, கோயிலுக்கே வந்து சேர்ந்தார் கோபாலய்யர். பத்தருடன் கூட்டுக் குரல் கொடுத்தார். கூட்டம் கூடியது. கையில் ஒட்டியாணத்துடன் நின்று கொண்டிருந்த தங்கம் என்ற அந்த தம்பி என்ன செய்வான்? 'திருடன் நானல்ல!' என்றும் அவனால் சொல்ல முடியாதே! பிறகென்ன? போலீஸ் வந்தது. தங்கம் திருடனாக்கப்பட்டான்.

★ சிரிப்பும் அழுகையும்—கதையை முடிக்குமுன் இந்தத் தலைப்புக் கேற்ற விளக்கம் வேண்டாமா? கேளுங்கள். இந்தச் சம்பவத்தைப் படித்த நீங்கள் "ச்சு...ச்சு... பாவம் தங்கம்!" என்பீர்கள். ஆனால்...

கோபாலய்யர் சிரித்தார்—தப்பித்தோம் என்ற மகிழ்ச்சி அவருடையது!

சங்கரப் பத்தரும் சிரித்தார்—அவரும் தப்பித்தோம் என்ற மகிழ்ச்சியோடு! அவர் சிரிப்பானேன் என்கிறீர்களா? அன்று இரவு முக்காடிட்டு ஓடியது ஐயர்தான் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஐயர் ஒட்டியாணத்துடன் ஓடியிருந்தால் — அதை விற்க முயற்சித்திருந்தால் — சங்கரப் பத்தர் செய்திருந்த பெரும்திருட்டு வெளியாகி யிருக்கும்! அவர் நகர சபைத் தலைவருக்கு செய்து தந்த ஒட்டியாணம் அசல் தங்கமல்ல; பித்தளைமேல் தங்கப் பூச்சு என்பது அதை ஏற்றுக் கொண்ட அம்பிகைக்குக் கூடத் தெரியாது! அது தெரிந்த ஒரேமனிதர் சங்கரப் பத்தர்தான். அதனால் ஆபத்திலிருந்து தப்பிய அவரும் சிரித்தார்!

அம்பிகையும் சிரித்தாள்!—சிரித்துக் கொண்டே யிருக்கிறாள், வழக்கம் போல்!

ஆனால், தங்கம் மட்டும் அழுகிறான், சிறைக் கம்பிகளுக்கிடையில்! பைத்தியக்காரன்— அவனும் கூட சிரித்திருக்கலாம், வேளா வேளைக்குக் கட்டாயப் படுத்தி உணவு தருகிறார்களே சிறையில், என்று. ஆனால் அவனது குற்றமற்ற நெஞ்சு அதை ஏற்கவில்லை. ஆகவே அவன் அழுகிறான்!

★ இந்த சிரிப்பும் — அழுகையும் இன்று நேற்றல்ல; ஆண்டாண்டு காலமாக ஒலித்து வருகிறது. அவை ஒழியாதா? ஒழியும் நாள் எந்நாள்? அதை அழிக்கும் பெரும் தொண்டிலே தம்பிகளே, தங்கைகளே, நீங்களும் ஈடுபட வேண்டும்! பெரும் பொறுப்புதான்—எனினும் அருந் தொண்டல்லவா!

—சொர்ணம்

# வம்பு செய்யும் வக்ர மூளை
## ★ அம்பு தொடுக்கும் ஆச்சாரியார்! ★

“அடுத்த பதினைந்து ஆண்டுகள் வரை மாநில சீரமைப்பின் சிபார்சுகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

அப்படி இயலாது என்றால் இந்திய உபகண்டம் முழுவதையும் மத்தியசர்க்காரின் நேராட்சிக்குக் கொண்டுவந்து, மாவட்ட அதிகாரிகளையும், மாவட்டக் கழகங்களையும், தன் அதிகாரத்திற்குள்ளாக்கி பிரதேச கமிஷர்களின் துணைகொண்டு ஆளவேண்டும்”

“தென் இந்தியாவின் அரசியல் முக்கியத்வத்தை பாதுகாக்க தட்சிண ராஜ்யம் அவசியம்”

“தென் இந்தியாவை, தமிழ், மலையாளம் என்ற முறையில் சிறு ராஜ்யங்களாகத் துண்டு போடுவதால் முக்யத்வம் இல்லாமல் போய்விடும்”

“பிரிவினைகளால் தேசிய சத்திகள் வீணுகக் கூடாது”

—சூழ்ச்சிப் போர்வையில், இந்திய உபகண்டத்து அரசியலில் உலவிக் கொண்டிருக்கும், ஆச்சாரியார், டில்லி பல்கலைக் கழகத்தில் அவருக்கே உரித்தான ‘விஷநாக்கை’ சுழலவிட சென்றிருந்தபோது மேலே தரப்பட்டுள்ள கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

மாநில சீரமைப்புக் குழுவினர் இந்திய உபகண்டத்தில் உண்டாக்கிவிட்டு சென்ற ‘குழப்பமான’ சூழ்நிலையை, பயன்படுத்திக் கொண்டு திராவிடத்தின் உரிமைக்குரலை நெருக்கிப்பிடிக்கும், நச்சுக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

மொழிவழி மாநில அமைப்பு காங்கிரஸ் இயக்கம், பெற்றெடுத்த செல்லக் குழந்தை.

அதன் அருமை பெருமைகளைக்குறித்து, மற்ற அரசியல் இயக்கங்களைவிட, புகழ்பாடி தாலாட்டியவர்கள் காங்கிரஸ் காரர்கள்தான்; ஆச்சாரியிருக்கும் அதிலே பெரும் பங்குண்டு.

அத்தகைய மொழிவழி அமைப்பை திராவிட முன்னேற்ற கழகம் முழுமனதோடு வரவேற்பதுடன், ஆதரவும் அளித்து,மொழிவழி மாநிலம் அமைவது ‘திராவிடநாடு திராவிடருக்கே,’ என்ற இலட்சிய கீதத்தின் முதல் வெற்றி என்ற காரணத்தால்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம்,என்ற ஓரினமொழி பேசும், சகோரர்களிடையே, ‘வீட்டுக்கு வீடு சுவர்’ என்ற நிலை வளர்ந்துவிட்டதால் உருவாகி இருக்கும் இந்த சூழ்நிலையில்; சகோதரச் சண்டையில் பேதத்தை வளர்த்துவிடக் கூடாது என்று நல்இதயம் கொண்டோர் முயன்று கொண்டிருக்கும் இந்த வேளையில், ஆச்சாரியார் புதிய குழப்பங்களையும், செயல்படுத்த முடியாத சில குருட்டு அபிப்பிராயங்களையும், வெளியிட்டிருக்கிறார்.

அவர் டில்லியிலே வெளியிட்டிருக்கும் கருத்துக்கள், அவர் சார்ந்துள்ள காங்கிரஸ் இயக்கத்தின் தீர்மானத்தையும், சென்னை அரசாங்கத்தின் முடிவையும் எதிர்ப்பதோடு மட்டுமல்ல; திராவிடத்தை, ஏகாதிபத்ய வெறி பிடித்தலையும்,வடநாட்டின் சுரண்டல் பூமியாக்கி அடிமைப் படுத்துவதற்கான சூட்சி மொழியும் கலந்ததாகும்.

‘தனக்கு ஒரு கண்போனால் பாதகமில்லை, எதிரிக்குஇரண்டு கண்களும் போனால் போதும்’ என்ற குணம் படைத்த ஆச்சாரியார், மாநில அமைச்சர்களை தூக்கி ‘கூவத்திலே’ வீசிவிட்டு, மத்திய சர்க்காரின் நேராட்சி நடைபெற வேண்டும் என்று கூறுகிறார்.

தென்னகத்தின், நலனில் தனக்கு அக்கரை இருப்பதாக கூறிடும் ஆச்சாரியார், மொழிவழிபிரிய வேண்டும் என்ற எண்ணம் பெருகி—தவிர்க்க முடியாத அளவிற்கு வளர்ந்துவிட்ட பிறகு, எல்லை காரணமாக ஏற்பட்டிருக்கும் சிக்கலை சுமுகமான முறையில் தீர்த்து வைக்க ஏன் முயலக் கூடாது?

வடநாட்டு பணமுதலைகளுக்கு சாதகமாக அமையும், இவர் விரும்பும் தட்சணப் பிரதேச அமைப்பைவிட, திராவிடம் மொழிவழி பிரிந்து வாழ்வதால் என்ன தீமை ஏற்பட்டுவிடும்?

தென்னாடு மொழிவழி பிரிவது. திராவிடநாடு பிரிவினைக்கு விரைவிலேவழிகோலும் என்ற உண்மையைப் புரிந்து கொண்ட காரணத்தால், அவர் விபரீத மூளையில் இருந்துகிளம்பிய வியாக்யானம்தான் இது என்பதைத் தவிர வேறொன்றும் நாம் சொல்வதற்கில்லை.

மொழிவழியமைப்பில் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமையான பங்குகளில், நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு இருக்கும் அக்கரை, தென்னகத்தின் அரசியல் ‘மேதை’ என்று கருதப்படும். இவருக்கு இல்லாமல் போய்விட்டது; ஏன்?

‘பிரிவினைகளுக்காக தேசிய சக்திகள் வீணுக்கப்படக் கூடாது’, என்றும் குறிப்பிட்டிருக்கிறார் ஆச்சாரியார்!

மொழிகளுக்கு முதலிடம் கொடுப்பதால்தான், தேசிய சக்திகளே வலுப்பெற முடிகிறது. காங்கிரஸ் இயக்கம் கூட, ஆந்திர காங்கிரஸ், தமிழ்நாடு காங்கிரஸ், என்ற முறையில் மொழியின் அடிப்படையிலே பிரிந்துநின்றுதான், அந்தந்த மொழி பேசுவோர்களிடையே தேசிய உணர்ச்சியை தட்டி எழுப்ப முடிந்தது; ‘ஏக இந்தியா’ என்ற வெறி நெஞ்சத்திலே நிழலாடிக் கொண்டிருக்கும் ஆச்சாரியாருக்கு இந்த தெளிவான கருத்து புரிவதற்கு நியாயமில்லை.

தென்னகத்தை தமிழகம், மலையாளம், ஆந்திரம், கேரளம் என்ற முறையில் பிரித்துவைப்பதால் முக்கியத்வம் இழந்துவிடும் என்கிறார்.

உலக அரங்கில், பிரிந்து வாழும் சின்னஞ்சிறு நாடுகள், எந்த விதத்திலே முக்கியத்துவம் இழந்து மூலையிலே கிடக்கின்றன! கூறமுடியுமா ஆச்சாரியாரால்? மாறாக—இந்திய உபகண்டமே, பார்த்து தலைகுனிய வேண்டிய அளவிற்கு, அரசியல், பொருளாதாரத் துறைகளில் சிறப்புடன் வாழவில்லையா?

தென் மாநிலங்கள் இந்திய உபகண்டத்திலிருந்து பிரிவதால் ‘ஒரே இந்தியா’ என்று பெருமை பேசுவதற்கு இடையூறாக இருக்கலாம்; திராவிடத்தைப் பொறுத்தவரை, மொழிவழி மாநிலங்கள் நன்மை பயப்பதோடு மட்டுமல்ல, திராவிடத்தனியரசு அமைவதற்கான சூழ்நிலையை விரைவிலே உண்டாக்கிவிடும் என்பது தெளிவு.

டில்லி சர்க்காரின் தொடர்பிலிருந்து விடுபட்டு தனியாட்சி நடத்த துடித்துக் கொண்டிருக்கும் திராவிடப் பெருங்குடியினரின், இலட்சிய முழக்கம், மொழிவழி மாநிலம் அமைவதன் காரணமாக விரைவிலே வெற்றி பெற்றால்—பார்ப்பனியத்தின் நச்சுப் பற்கள் பிடுங்கப்படுமே என்ற கிலி—ஆரிய குலமகிபராம் ஆச்சாரியாரை குழப்பத்திலே மூழ்கடித்திருக்கிறது.

முரண்பட்ட கருத்துக்களை அடுத்து அடுத்து வெளியிடுவதில் கைதேர்ந்த ஆச்சாரியார், மொழிவழி அமைப்பால் திராவிடக் கூட்டாட்சி உருவாகி. டில்லி சர்க்கார் திராவிடத்தைப் பிணைத்து வைத்திருக்கும் அடிமைத்தளை உடைபட்டு, பார்ப்பனியம் செல்வாக்கிழந்துவிடும் என்ற ஓரே காரணத்தை நினைவிலே கொண்டு தான், ஆச்சாரியார் டில்லியிலே புலம்பி இருக்கிறார்.

இந்திய உப கண்டத்திலே ஆச்சாரியார், தன்னை ஈடுஇணையற்ற அரசியல் விற்பன்னர், என்று கருதிக்கொண்டு வெளியிடும் கருத்துக்களும், அபிப்பிராயங்களும் மக்கள் மன்றத்தில் மட்டுமல்ல, தேசிய வட்டாரத்திலும் கூட, செல்லாக் காசாகி வருகிறது.

மனிதாபிமானமும்,தன்மான உணர்வும் கொண்ட யாரும் ஆச்சாரியாரின் டில்லி கருத்துகளுக்கு மதிப்பளிக்க முடியாது.

உள்ள சிக்கலை தீர்ப்பதற்கு பதில் புதிய குழப்பங்களை புகுத்துவது அறிவுடைமையாகாது.

தாயக விடுதலைக்காக, குருதி மழைகொட்டவும் தயார்என்று தோள்தட்டி நிற்கும், திராவிடப் பெருங்குடியினரிடம் ‘ஏக இந்தியா’ தத்துவமும், ஏமாற்றுப் பேச்சும், பயன் படாது என்பதை நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்.


**மாநில மாநாட்டு நிதிக்காக**

**10-12-55** சனிக்கிழமை மாலை 6-மணிக்கு

கோகலே மண்டபத்தில்

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

அவர்கள் தலைமையில்

நடிப்புப் புலவர் கே. ஆர்: இராமசாமி அவர்கள்

இன்னிசை விருந்தளிப்பார்.

ரூ. 2 நன்கொடைசீட்டுகள் கீழ்காணும் இடங்களில்கிடைக்கும்

* ‘அறிவகம்’ இராயபுரம், சென்னை—13.
* ஜி. பெருமாள், 4. நமச்சிவாய முதலிதெரு. பைக்கிராப்ட் ரோட் திருவல்லிக்கேணி.
* ந. செயராமன் 30, கிடங்குத் தெரு, சென்னை-1
* ந. வேதாசலம் 40, முத்தியால் நாய்க்கன்தெரு. புரசைவாக்கம்.

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

# சிறைப் பறவை...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

குற்றம் ஜேபடி அல்ல! கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக அவன் கைது செய்யப் பட்டான். இரண்டு ஆண்டு சிறைவாசம் கிடைத்தது. அவனது குடிசைத் தொழில் தந்த பரிசாக!

வெளியிலே இருந்தால் உணவு தேடுவது பெரும் பிரச்சனையாகும். ஆனால்.. சிறைச் சாலையில்...மணி அடித்தால் அச்சடித்த சோறும். அவுன்சு குழம்பும் தன்னைத் தேடி வருகிறது என்று அவன் மனம் எண்ண ஆரம்பித்தது. உழைத்து வாழ்ந்தாலென்ன—உழைக்காமல் வாழ்ந்தாலென்ன-எல்லாம் ஒன்று தான் என்ற எண்ணம் தலை தூக்க ஆரம்பித்தது. 'பட்டுத் திரைக்கு பின்னால் செய்யும் திருட்டுகள் வெளி உலகிற்குத் தெரிவதில்லை. மாளிகையிலே நடைபெறுகிற கேளிக்கைகள் ஒளி வீசும் பணத் தால் மறைக்கப் படுகிறது. சட்டம் அவர்களை ஒன்றும் செய் வதில்லை. ஏழைகள்தான்—ஏனோ தானோக்கள்தான் சட்டத்தின் கண்களுக்கு இரையாகின்றனர். உல்லாச உப்பரிகையில், சல்லாப சுந்தரர்கள் பொல்லாதசெயல்கள், செல்வாக்கால் மறைக்கப் படுகின் றன. இரும்புக் கம்பியை எண்ண வேண்டிய பலர்—இரும்புப் பெட்டியை நிரப்பிய வண்ணம் உள்ளனர். காராக் கிரகத்தில் காலத்தைக் கழிக்க வேண்டியவர் கள் மெருகு குலையா காரில் பவனி வரத்தான் செய்கிறார்கள். ஆனால் ஏழை... சட்டத்தின் கண்களிலே யிருந்து அவன் தப்புவதே இல்லை. அதன் கோரப் பிடியில் சிக்கிக் கொண்டவர்கள் மீள்வதே இல்லை. அவனது மனதில் எண்ண அலைகள் மோதின!

சிறைச்சாலையில் சில நாட்கள் சொகுசாகவே கழிந்தன. காராக் கிரகத்தின் கொடூரங்களைக் கண்டு மனம் சளைக்கவில்லை. ஆரம்பத்தி லிருந்த உற்சாகம் வர வர குறைய ஆரம்பித்தது. நாட்கள் என்கிற மழைத் துளிகள் மாதம் என்கிற வெள்ளமாக ஓட, வேதனை வேல்கள் அவனது உள்ளத்தைத் துளைக்க ஆரம்பித்தன. தனிமை யின் கொடுமை அவனது இதயத் தைப் பிழிந்தன. கருப்புக் குல் லாய்களின் இருதயமற்ற செய் கையும், 'கானிக்' வார்டர்களின் கொடுஞ் செயல்களும் அவனது இதயத்தை உறுக்கின. அச்சடித்த சோறும், அவுன்சு குழம்பும் அவ னது குடலைப் புரட்டின. எல்லா வற்றையும்விட, இரவிலே, இருட் குகையிலே, கானம் பாடும் கொசுக்களுக்கும் — இரத்தம் உறிஞ்சும் மூட்டைப் பூச்சிகளுக் கும் மத்தியிலே காலத்தை ஓட்டு வது அவனுக்கு வேதனையாக இருந்தது. தனிமையின் ஏக்கம் அவனது தூக்கத்தையும் விரட்டி யது. என்று தன் வாழ்நாளில் விடி வெள்ளி தோன்றும்; இந்தப் பாழ டைந்தக் குகையிலிருந்து விடுதலை கிடைக்கும்; வெளியுலகில் களி நடனம் புரியும் நாள் என்னாளோ... என்றெல்லாம் சிந்தித்து சிந்தித்து கண்ணீர் சொரிவான். கண்ணீர் வெள்ளமாக ஓடி அவனது கிழிந்த கம்பளியை நனைக்கும்.

இந்த சிறைச்சாலையிலிருந்து விடுதலைக் கிடைத்ததும், எங்கே யாவது பணி புரிந்து தன் காலத் தைக் கழிக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான்.

இரண்டு ஆண்டுகள் உருண் டோடின. மீண்டும் இந்த நீள் வையகத்தில் நடமாட ஆரம்பித் தான். எங்கும் ஏமாற்றமும், ஏச லும், அவனைத் தாக்கின. 'எப்படி வாழ்வேன்?' என்று அவன் பாட வில்லை. ஆனால் அந்தக் கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்து கொண்டுதானிருந்தது.

ஒருநாள் இரவு. நீல வானில் நிலாப் பெண்ணாள் தன் தாரகைத் தோழிகளோடு கண்ணாமூச்சி விளை யாடிக் கொண்டிருந்தாள். அந்த நீண்ட சாலையிலே தன் துர்பாக்கிய நிலையை எண்ணி எண்ணி பொரு மிக்கொண்டு, நடந்துகொண்டி ருந்தான் அவன். சாலையின் இரு பக்கங்களிலும், வானத்தை முட் டும் எழிற் மாடங்களையும் — கூட கோபுரங்களையும் கண்டு அவன் நெஞ்சு குமுறிற்று. தனக்கு ஒரு குடிசைகூட இல்லையே யென்று! அவனின் இதயத்தின் அடித்தளத் திலிருந்து பெருமூச்சு கிளம்பிற்று. திடீரென்று ஒரு மாடி வீட்டிலி ருந்து 'திருடன், திருடன்' என்ற கூக்குரல் கேட்டது. திருடன் என்ற குரல் அவன் காதில் விழுந் ததும், அவன் ஓட ஆரம்பித்தான். பின்னால் யாரோ ஓடி வருவதை யும் கவனித்தான். அவனது வேகம் அதிகமாயிற்று. கால்கள் தள்ளாடின—மூச்சு திணறிற்று— பசியின் களைப்பு வேறு; மயங்கிக் கீழே விழுந்தான்!

கண்களைத் திறக்கும்போது அவனைச் சுற்றி போலீசார் இருப் பதைக் கண்டான். "ஐயோ! நான் திருடனல்லவே! நான் திருட னல்ல; திருடனல்ல!' என்று கத்த ஆரம்பித்தான்.

"திருடுபவர்கள் யாரும் நான் தான் திருடினேன் என்று ஒத்துக் கொள்வதில்லை"— இன்ஸ்பெக்டர் ஏளனச் சிரிப்போடு கூறினார். அவ னது பூர்வாங்கம் விசாரிக்கப்பட் டது. மாளிகையிலே நடந்த கொள்ளைக்கு அவன்தான் கதா நாயகன் என்று தீர்மானிக்கப் பட்டு, ஐந்தாண்டு கடுங்காவல் சிறைவாசம் அவனுக்கு காருண்ய மிக்க அரசாங்கத்தாரால் அளிக் கப்பட்டது. அவனது அவலக் குரலை—சோகக் கதையை யாரும் கேட்கவில்லை. அவனுடைய பழைய சிறைவாசமே அவனுக்கு எதிராக காட்சி அளித்தது.

இப்போது அவன் கருப்பு குல் லாய்! வேதனையால் அவன் உடல் வாட ஆரம்பித்தது. நெஞ்சு குமு றிக் கொண்டேயிருந்தது. சிறைச் சாலையின் கொடுமைகள் அவனை சித்ரவதை செய்தன. செய்யாத குற்றத்திற்குத் தண்டனையா? இத யம் குமுறும்; விடுதலை தாகம் தினம், தினம் வளர ஆரம்பித்தது. ஒருநாள் மாலை சிறையின் நீண்டு உயர்ந்த மதில் சுவரைத் தாண்டி ஓடிவிட்டான். உலகத்தின் எந்த மூலைக்காவது ஓடி ஒளிந்து கொள் ளலாம்; தன்னைத் தேடிப் பிடிக்க இயலாது—என்ற எண்ணத்துடன் ஓடினான்; ஓடினான்; ஓடிக்கொண் டேயிருந்தான்.

இறுதியில் ஒரு கிராமத்தில் அவ னது ஓட்டம் நின்றது. அந்தக் கிராமத்து பண்ணையாரின் காலைப் பிடித்து— கண்ணீரால் அர்ச்சித்து— பண்ணையில் வேலைக்கு அமர்ந் தான். கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை அவன் யாருக்கும் கூறவில்லை. அந்த நிகழ்ச்சிகள் அவன் மனதிலிருந்தும் மறைந்து கொண்டிருந்தது. உலகத்தில் தானும் வாழ முடியும் என்ற எண் ணம் அவனை மகிழ்ச்சிக் கடலில் தள்ளியது. வாழ்நாள் முழுதும் இந்தக் கிராமத்திலேயே கழித்து விடலாம்; இனி வறுமையோ, சிறையோ தன்னைத் தீண்டாது, என்றெல்லாம் அவன் இதயம் கூறும்.

ஒருநாள் பண்ணையார் மிகக் கோபமாக வந்தார். பண்ணை ஆட் கள் அவரைக் கண்டு நடுங்கினர். அவர் வைத்திருந்த இருபது ரூபாய் காணவில்லை. "யார் எடுத் தது? உண்மையைச் சொல்லி விடுங்கள். இல்லாவிட்டால் தோலை உரித்து விடுவேன்!" கர் ஜித்தார் பண்ணையார். அங்கு பணி புரியும் எல்லோருடைய பொருள் களும் சோதனை யிடப்பட்டன. ஓரிடத்தில் கந்தல் துணிகளுடன் அந்த இருபது ரூபாய் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்தத் துணிகளுக்கு உரிமையாளன் அழைக்கப்பட்டான். உடலெல் லாம் நடுங்க, கண்கள் நீரைக் கொட்ட, அவன் பண்ணையார் முன் போக காலெடுத்து வைத் தான்.

நம் நண்பன் இந்த கோரக் காட்சியைக் கண்டான். அவன் உள்ளத்திலே அந்தப் பரிதாபத் துக்குரியவனின் கண்ணீர் இரக் கத்தைச் சுரந்தது. "இம்முறை அவன் அகப்பட்டுக் கொண்டால் இனி வாழ்நாள் முழுதும் திருட னாக வாழ வேண்டியதுதான். என் வாழ்வு பாழானது போல, அவன் வாழ்வும் பாழாகிவிடும். கெட்டது தான் கெட்டுவிட்டது, என் வாழ்வு, அவன் வாழ்வாவது பட் டுப் போகாமலிருக்கட்டும். நான் இந்த மண்மாதா மீதுபுரள ஆரம் பித்த நாளிலிருந்து என்னைக் கண்ணீர் விட்டேனா பார்' என்று தொடர்ந்துகொண்டே யிருக்கி றது. பாவம், இந்த துர்பாக்கிய னும், ஏன் அந்த நிலைக்கு வர வேண்டும்? அவனது வாழ்வு என் னால் வளம் பெற்றதாக இருக்கட் டும்"—எண்ண அலைகள் அவன் மனதிலே எழுந்தன. பண்ணையாரி டம் முன்பே ஓடினான்.

"ஐயா! தங்கள் பணத்தைத் திருடியவன் நானேதான்! அதை எடுத்து என் நண்பன் துணிகளி லே ஒளித்து வைத்தவனும் நானே தான்! நான் திருடன்தான்! ஆனால் துரோகி அல்ல..."

பேசிக் கொண்டிருந்தவனை அவன் நண்பன் தடுக்கப் பார்த் தான். இவனை நம் நண்பன் ஒரு பக்கமாக அழைத்துச் சென்று, "பேசாதே! மௌனமாக இரு! நீ இருபது வெள்ளிக் காசுகளைத் திருடிவிட்டாய் இல்லை இல்லை: உன் தேவைக்காக, தேவைக்கு அதிகமாக வைத்திருந்தவனிட மிருந்து எடுத்துக் கொண்டாய் உன் இதயம் கவர்ந்த காந்த நிகர் மேனியாளுக்கு பரிசளிக்க இருக்க லாம்; அல்லது வறுமையால் வாடும் உன் பெற்றோர்களுக்கு உதவ இருக்கலாம். ஆனால்இதற்கு தண்டனை என்ன தெரியுமா? ஆறுமாதம் சிறைவாசம்! ஒரு முறை நீ சிறைவாயிலில் நுழைய ஆரம்பித்துவிட்டால் வாழ் நாள் பூராவும் நீ நுழைந்து கொண்டுதா னிருக்கவேண்டும். நான்பலமுறை சிறை வாசத்தை அனுபவித்தவன் சிறைச் சாலையின் கொடுமைகள் எனக்குப் பழக்கமானவை. உன் பருவத்தின் எழிலைப் பாழாக்கிக் கொள்ளாதே! ஆனால் மறுமுறை இந்த தவறைச் செய்யாதே! என் தோழா! வையகத்தில் ஒழுங்காக வாழ நினைத்தேன்; வாழ்திருக்க முடியும், என்னைப் பெற்ற தாயும், தந்தையும், என் இளமைப் பருவத்தில் நடுத் தெருவில் திரிய விடாமலிருந் திருந்தால்! நான் சிறைச்சாலையிலிருந்து ஓடி வந்த வன். என்றைக்காவது ஒருநாள் பிடிபடுவேன். இன்று உன்னைக் காப்பாற்றினேன் என்ற பெருமை யுடன் சிறைச்சாலையில் நுழை கிறேன். என் வாழ்நாளில் ஒரு முறையாவது ஒரு நல்ல காரியம் செய்தேன் என்ற பெருமை என்னைச் சேரட்டும். அழாதே, நண்பனே, அழாதே! கண்ணீரைத் துடைத்துக் கொள்! இந்த எண் ணத்திற்கு மீண்டும் அடிமையாகி விடாதே! மனிதன் திருடனாகப் பிறப்பதில்லை! திருடனாக்கப் படுகி றான்! நான் போகிறேன்; புன்ன கை பூக்கும் முகத்துடன் விடை கொடு..."

அந்த சிறைப் பறவை இப் போது ஆயுள் கைதி! வெளி உலகிலே அவன் உலவினால் பயங்கரச் செயல்கள் செய்வா னென்று அவனை ஆயுள் கைதி யாக்கி விட்டார்கள்!

★

வ. ஆ. மாவட்ட
மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்.
நேரம்: 4-12-55 காலை 10 மணி
இடம்: நேஷனல் டாக்கீஸ்
தலைவர்: முல்லை சத்தி
சொற்பொழிவாளர்கள்:
மு. கருணாநிதி
ப. உ. சண்முகம்
எஸ். எஸ். இராசேந்திரன்
டி. வி. நாராயணசாமி
கட்டணம் ரூ. 1, 0-8-0, 0-4-0.

சட்டக் கல்லூரி
தமிழ் மன்ற நிதிக்காக
10—12—55 சனியன்று
'பாரகன்' தியேட்டரில்
கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்
தலைமையில்
'நிரபராதி'
படம் காட்டப்படும்.
டிக்கட் ரூ. 2, 1.
நடிகைகள், அஞ்சலிதேவி, ஜி. வரலட்சுமி, ராஜசுலோசனா ஆகி யோர் மேடையில் தோன்றுவர்.

# பிறை வானம்



...பிள்ளைகள் பகுதி...

# சிரிப்பும் அழுகையும்!

★ அம்பிகை சிரித்தாள்; சிரித்துக் கொண்டேயிருக்கிருள். ஆமாம்; அவளும் ஒரு பெண்ணுக உருவம் எடுத்த அன்று முதல் இன்றுவரை சிரித்தபடியே இருக்கிருள். பகல் கொள்ளைகள்—'பஞ்சமா' பாதகங்கள் — நெஞ்சுலுக்கும் சோகச் சம்பவங்கள்—ஆயிரமாயிரமாகப் பார்க்கிருள். ஆனால் பதைக்கவில்லை; 'ஐயோ, பாவமே' என்று ஏங்கவுமில்லை; சிரிக்கிருள். 'யார் அவள், பைத்தியமோ?' என்று கேட்டுவிடாதீர்கள். அப்படியல்ல; இந்த அம்பிகை சாதாரணப் பெண்ணுமல்ல; மனித இனமே அல்லாத கடவுள் குலம்—பெண் தெய்வம்!

ஊருக்கு மத்தியிலே — உயர்ந்த கோபுரங்கள் — சுற்றிலும் மதிற் சுவர்கள்—இப்படி கற்கோட்டையைப் போல காட்சியளித்தது அந்தக் கமலாம்பிகையின் இருப்பிடம் — கோயில்! அந்தக் கோயிலைக் கட்டிய ஏழைகள் — ஏன்; சிரிக்கும் முகத்துடன் அவளை வடித்துத் தந்தானே அந்த சிற்பி— அவர்கள் ஒருவருமே இப்போது இல்லை. ஆனால் அவள் மட்டும் இருக்கிருள், சிரித்தபடியே!

★ அன்ெருரு நாள்—வெள்ளிக் கிழமை. கோயில் கர்ப்பக் கிரகத்துக்குள் நின்று கொண்டிருந்தார், கோயில் அர்ச்சகர் கோபாலய்யர். அம்பிகை சன்னதியிலே எரிந்து கொண்டிருந்த 'மெர்க்குரி' விளக்குகளின் ஒளியால் அவர் முகத்திலே படர்ந்திருக்கும் சோகத்தை நன்ருகக் காண முடிகிறது. வெள்ளை உள்ளத்தைப்போல 'பளிச்' சென்று தெரிந்த அந்த விளக்குகளைப் பார்த்தார் அவர். அவருக்கு என்னவோ நினைவுக்கு வந்துவிட்டது. அந்த விளக்குகளைப் போடக் கூடாது என்பதற்காக அவர் எவ்வளவு பாடுபட்டிருக்கிருர்—சூது செய்திருக்கிருர்! அம்பிகைக்குப் பக்கத்திலே — இருள் மண்டபத்திலே—தான்நடத்திவந்த 'திருட்டுகள்' இனி நடைபெற முடியாதே என்று பயந்தார். சொந்தப் பணத்தை செலவழித்து நெய்யும், தேங்காய் மூடியும் அவர் வாங்கியதே இல்லையே! அந்த லாபம் பறிக்கப்பட விரும்புவாரா அவர்! ஆகவேதான் மின்சார விளக்குகள் கூடாது என்று நினைத்தார். சொன்னுல் யார் கேட்பார்கள்? சூது செய்தார். நடித்தார். ஆடினுர் சாமி வந்தவராக. அம்பிகை அவர் உடலிலேயே புகுந்து பேசினுள், "ஐயோ பாவிகளே! வேண்டாமடா மின்சார விளக்கு! இது தெய்வ உடலடா — வெப்பம் தாங்காதுடா! பக்த கோடிகளே!...... எண்ணெய் விளக்குகளே போதும்; போதும்!" என்று கத்தினுர் அம்பிகையின் சார்பில். ஆனுல் அந்தக் குரலுக்குக்கூட மதிப்பு கிடைக்கவில்லை. ஒருவேளை அம்பிகையே வாயைத் திறந்து சொல்லவில்லையே என்று நினைத்தார்களோ என்னவோ, விளக்குகள் எரிய ஆரம்பித்துவிட்டன. அன்று முதல் கோபாலய்யரின் நெஞ்சத்திலும் எரிய ஆரம்பித்துவிட்டது வேதனைத் தீ!

ஐயர் விளக்குகளிலிருந்த கண்களை நகர்த்தினுர். அம்பிகையை ஒருமுறை கவனித்தார். அவளது இடுப்பிலே அணிவிக்கப்பட்டிருந்த தங்க ஒட்டியாணம் விளக்கொளியில் 'பளிச் பளிச்' என்று மின்னியது. அதுபுது ஒட்டியாணம்—அம்பிகைக்கு புதியசொத்து! ஊரிலே உள்ள பெரிய புள்ளிகளில் ஒருவர்—நகரசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்—தனது வெற்றிக்கு அடையாளமாக அம்பிகைக்கு செலுத்திய காணிக்கை அது. ஐம்பது பவுனில் அழகான ஒட்டியாணம்! அந்த மாவட்டத்திலேயே புகழ் பெற்ற தங்க நகை செய்யும் சங்கரப் பத்தர் செய்தது. செலவு கொஞ்சநஞ்சமல்ல; சங்கரப் பத்தரும் சமான்யப்பட்டவரல்ல; அவருக்கென்று பிரத்யேகக் கூலி—மற்ற செலவுகள்—எல்லாம் சேர்ந்து ஐயாயிரம் ரூபாய் ஆகியதாம் மொத்தமாக! தேர்தலுக்கென்று செலவழித்த பெரும் தொகையில் இது ஒரு தூசிதான் அந்தப் பண்ணையாருக்கு! எப்படியிருந்தால் என்ன? தேர்தலுக்கென்று இரவு பகலாக பாடுபட்ட 'பயில்வான்' களுக்குக் கிடைத்த கூலியைவிட, அம்பிகைக்கு கிடைத்ததென்னவோ அதிகம்தான்! கோபாலய்யர் ஒரு மாதிரியாகச் சிரித்தார்; "ஒட்டியாணமாம் ஒட்டியாணம்! பணம் எங்கேயோ சிக்கிக் கொண்டு என்னவோ பாடுபடுகிறது. என்னிடம்மட்டும் கிடைத்தால்...சென்னைக்குப் போய் ஒரே நாள் ரேஸில்..." — ஐயர் இதை எண்ணிமுடிக்கவில்லை. வாசலில் 'அர்ச்சனை'க்கென்று வந்துகொண்ருந்த சிலரைப் பார்த்துவிட்டார். எச்சல் இலையைக்கண்ட பிச்சைக்காரனைப்போல அவர் முகம் மலர்ந்தது. அவர்களை வரவேற்ருர்.

★ வந்தவர்கள் அர்ச்சனை முடிந்து திரும்பினுர்கள். ஐயரின் கையிலே 'தட்சணை' என்ற பெயரால் வசூலிக்கப்பட்ட பதினுறு அணுக்கள் இருந்தன. ஐயர் அதை இடுப்பில் சொருகிக் கொண்டார். அந்தக் கணம் முதல் அவர் ஒரு நிலையில் இல்லை. ஒரே பரபரப்பு—பதட்டம்! 'எப்போது கோயிலை விட்டு வெளியேறுவோம்' என்ற ஆவலுடன் இங்கு மங்கும் நடந்து கொண்டிருந்தார். அவரது கண்கள்தான் அம்பிகையின் மேல் இருந்தன; ஆனுல், உள்ளமோ ராஜா, ராணிகளின்மேல்-அதாவது சீட்டுக் கட்டின்மேல் இருந்தது. வழக்கமாகக் கூடும் சீட்டுக் கச்சேரி அவருக்காகக் காத்துக்கிடக்குமே! கையில் கிடைத்த ஒரு ரூபாயுடன் அங்கு ஓடினுல், அந்த ஒரு ரூபாய் பத்து ரூபாயாக—இருபது ரூபாயாகப் பெருகலாம்; அல்லது கையை விட்டுப் போனுலும் போய்விடலாம்! ஆனுல், ஐயருக்கு அதைப்பற்றி எதுவும்கவலையில்லை. அது சூதாட்டம்தானே! முதலில் கோயிலைவிட்டுப்புறப்பட்டாக வேண்டும்—இதுதான் அவரது சிந்தனை — எண்ணம் — எல்லாம்.

★ மணி ஒன்பதிருக்கும். ஐயர் அவசர அவசரமாக மண்டபத்து வாசல் கதவை இழுத்துப் பூட்டினுர். வேக வேகமாக சீட்டுக் கச்சேரி கூடும் திண்ணையை நோக்கி நடந்தார். ஆனுல் அப்போது கதவுக்கு அருகிலே குளிருக்கு பயந்து சுருண்டு கிடந்த ஒரு உருவத்தை அவர் கவனிக்கவில்லை. அவருக்கு நேரமேது? ஆனுல் அந்த உருவத்தை நாம் அப்படியே விட்டு விட்டுப் போய்விட முடியாது. கண்டிப்பாக அதை அறிமுகப் படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.

அந்த உருவத்துக் குடையவன் ஒரு அனுதைச் சிறுவன். தங்கம் என்று தன் செல்வத்துக்குப் பெயரிட்ட அவனது ஏழைப் பெற்ருேர், 'விலை மதிப்பற்ற தங்கத்துக்கு சமானமாயிற்றே அவன்; சுக வாழ்வு வாழ்வான்' என்ற எண்ணத்தோடு கண்களை மூடிவிட்டார்கள். அன்று முதல் அந்த அனுதைக்கு அம்பிகை சன்னதிதான் படுக்கையறை. அவன் கண்ணீர் விடுவான்; சில சமயங்களில் அழுவான்; ஆனுல், வாய் திறக்க மாட்டான்! அம்பிகையைப் போல் அவனும் மௌனத்தைத்தான் கடைப் பிடிப்பான். ஆனுல், ஆண்டவன் அல்ல; ஊமை! அந்த பரிதாபத்திற்குரியவனுக்கு பேச மட்டும் சக்தியிருந்தால், அம்பிகையின் எதிரிலே தினம் தினம் புலம்பியிருப்பான் தன் நிலை பற்றி! பாவம், துதிபாடி தொழுபவர்களையே கவனிக்காத அம்பிகை, இவனை ஏன் கவனிக்கப் போகிருள்?

★ மற்ெருரு நாள் — அன்றும் வெள்ளிக்கிழமைதான். கோபாலய்யர் அம்பிகையின் முன் உட்கார்ந்திருந்தார். முகத்திலே சோகம்; கன்னத்திலே கைகள்; ஆனுல், உள்ளத்திலோ......? "ஐயரே, நாளைக்கு சனிக் கிழமை! சென்னையிலே ரேஸ்! இன்னிக்கே புறப்பட்டுவிடும் பணத்தோடு! ஒரு விளாசு விளாசிப் பார்க்கலாம்... அதிலே தானய்யா இருக்கு இன்பம்! உம் அம்பிகையை நம்புவதைவிட அந்தக் குதிரைகளை நம்பினுல் பலனுண்டு ஐயா! கோடீஸ்வரனுகவே ஆகி விடலாமய்யா!" என்று அவரது சென்னை சகா ஒருவர் படித்துப் படித்துச் சொல்லியது அவர் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

"நாளை ரேஸ்!... பணத்தோடு சென்ருல் பலனுண்டு நிறைய...! பணத்துக்கு என்ன செய்வது?..." —ஐயர் தடுமாறினுர். அவர் கண்கள் அம்பிகையின் ஒட்டியாணத்தின் மேல் பாய்ந்தன! அவரது நெஞ்சத்திலே கொழுந்து விட்டெரிந்த பேராசைத் தீயிலே அம்பிகையின் ஒட்டியாணம் சாம்பலாகப் போகிறதோ!

அர்ச்சனைக்கு ஒருவரையும் காணும். தினம் தவருமல் அம்பிகையை வலம்வரும் சங்கரப் பத்தரைக்கூட அன்று காணவில்லை. புதிய நகரசபைத் தலைவருக்கு எங்கோ விருந்தாம்; அங்கு சென்றிருக்கலாம். கோயிலில் ஒரே அமைதி—நிசப்தம்! இத்தனைக்கும் அன்று புனித வெள்ளிக்கிழமை! "கெட்டுவிட்டது காலம். இனி நானும் அம்பிகையும்கூட 'மியூசிய'த்துக்கே போய்விட வேண்டியதுதான்" என்று முணுமுணுத்தார் ஐயர்.

சற்று நேரம் சென்றது. ஐயரின் உள்ளத்தில் எழும்பி நின்ற ரேஸ் என்ற காற்று புயலாகியது; பூகம்பமாகியது! ஐயர் தத்தளித்தார். பூகம்பத்திலே சிக்கிக் கவிழ்ந்தது நேர்மையும்—நீதியும்! தடுமாறிய அவரது கரங்கள் ஒட்டியாணத்தைக் கப்பென்று பற்றின. கை கால்கள் நடுங்கின. ஐயரின் உடல்கூட தடதடவென்று ஆடியது. கோபாலய்யருக்கு இதுபுதியபழக்கமல்ல; இருந்தாலும் இதுவரையில் செய்திராத அளவுக்குப் பெரிய திருட்டு அது! மேல் துண்டை எடுத்து தலையிலிருந்து உடல்முழுதும் போர்த்திக்கொண்டார். ஒட்டியாணத்தை இடுப்பில் மறைத்துக் கொண்டார். அவசர அவசரமாக மண்டபத்தின் வாசலுக்கு ஓடிவந்தார். ஆனுல்......அவரது ஓட்டத்தைத் தடை செய்யும் விதத்திலே—விருந்து முடிந்த அடையாளமாக-'ஏவ்' என்று ஏப்பமிட்டுக் கொண்டு வந்துகொண்டிருந்தார் சங்கரப் பத்தர். எப்படியிருக்கும் ஐயருக்கு! என்ன செய்வதென்றே புரியாமல் இங்குமங்கும் ஆடினர்.

"டேய், யாரது?"—முக்காடிட்ட உருவத்தைக் கண்ட சங்கரப் பத்தர் இப்படிக் கேட்டார், அதிகாரத் தொனியோடு.

அவ்வளவுதான்; ஐயர் துடித்தே போனுர். கையில் ஒட்டியாணத்துடன் அகப்பட்டுவிட்டால் என்ன செய்வது? மின்னல் வேகத்தில் ஐயரின் மனதிலே ஒரு யோசனை! சங்கரப் பத்தர் ஓடிவர ஆரம்பித்துவிட்டார். மறுகணம் ஐயர் ஒட்டியாணத்தை மண்டபத்தின் வாசலில் வீசி எறிந்தார். எதிர்ப்புறமாக ஓட ஆரம்பித்தார். மறைந்தார்.

தன் எதிரில் 'டங்' கென்று விழுந்தது எது என்று அறிய அதைத்தேடி எடுத்தான், மண்டபத்து வாசலில் வழக்கம்போல்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்:
(●) பி. கே. வேலன்
தஞ்சைரோடு
விஜயபுரம்
திருவாரூர்.

சுப்ரமணியன்; காஞ்சிபுரம்.

(?) வடநாட்டுக் கதர் சட்டைகள் தங்கள் பெயர்களின் இறுதியில் 'ஜீ' என்ற எழுத்தைச் சேர்த்துக் கொள்வதேன்?

தென்னாட்டை ஜீரணிக்கிறோம்—என்பதைக்காட்டுவதற்குத் தான்!

சி. க. அப்பன்; சென்னை-17.

(?) கம்யூனல் ஜி. ஓ. வை ஒழித்து விடக்கூத்தாடிய பார்ப்பனியம் சென்னை மேயர் தேர்தலில் மட்டும் அந்த முறையைப் பின்பற்றுவானேன்?

இதுவும் இல்லாவிட்டால் 'அவாள்' கூட்டத்துக்கு மேயர் பதவி எலும்புத் துண்டு ஒரு தடவைகூட கிடைக்காதே; அதனால்தான்!

அம்பிகாபதி; திருக்காட்டுப்பள்ளி.

(?) தற்கால சென்னை, திருச்சி ரேடியோ நிலையத்தின் தேவை என்ன?

"வானொலி நிலையம் நடத்துவது எப்படி?"—என்பதற்கான தொல்காப்பியம்தான்!

வெற்றியழகன்; சென்னை-21.

(?) 'கருப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்' இதன் பொருள் என்ன?

'காவல்' என்றால் காப்பது என்று பொருள். அதாவது கருப்புடை அணிந்தோர் நாட்டைக் காப்பதில் கெட்டிக்காரர்கள்!

வி. பராங்குசம்; சென்னை-17.

(?) புல்கானின்—குருஷேவ் ஊர்வலம் மவுண்ட்ரோடு வழியாகச் சென்றபோது உங்கள் அலுவலகத்தில் பறக்கும் தி. மு. க. கொடியைப் பார்த்த போது என்ன நினைத்திருப்பார்கள்?

இந்திய கம்யூனிஸ்ட் கொடியின் சிகப்பைப் பிடுங்கிக் கொண்டு உண்மையான பொதுவுடமை வளர இங்கு ஒரு இயக்கம் இருக்கிறதே—என்று எண்ணி புளகாங்கிதமடைந்திருப்பார்கள்!

(●) பி.கே.வேலன்; விஜயபுரம்.

(?) விஷ்ணு பக்தர்கள் நெற்றியிலே போட்டுக் கொள்ளுகிற நாமம் விஷ்ணுவுடைய பாதம் என்கின்றனரே; அப்படியானால் விஷ்ணுவின் நெற்றியிலே இருப்பது யாருடைய பாதம்?

ஆண்டவனே வேண்டாமென்று உதைத்துத் தள்ளும் நாத்திகர்களின் பாதமாயிருக்கலாம்!

ஆர். எம். முத்து; விஜயபுரம்.

(?) ஓய், எழுத்தாணியாரே! ஏனய்யா உலகம் அழியாமல் இருக்கிறது?

மூன்றாவது உலக யுத்தம் இன்னும் ஏற்படவில்லையே; அதனால்தான்!

க. சீனுவாசன்; திருச்சி.

(?) ஆஸ்தீகம்; நாஸ்தீகம்—இவைகளுக்கு இடையே உள்ள வித்யாசம் யாது?

ஞானசூன்யத்துக்கும், விஞ்ஞானத்துக்கும் உள்ள வித்யாசம் தான்!

கி. தம்புசாமி; பொன்மலை.

(?) ஓய் எழுத்தாணியாரே! உம் மூளையை என் நண்பர் பத்தாயிரம் ரூபாய்க்குச் கேட்கிறார்; தருவீரா?

அய்யையோ! என்னுடையதைத் தரமுடியாது! உன் நண்பருக்கு மூளை ஏதாவது வேண்டுமானால் 'மிலிட்டரி ஓட்டலில்' பத்தணா கொடுத்து வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள்!

(?) அய்யர் அணிந்து கொள்ளும் பூணூலுக்கும், ஆங்கிலேயன் அணிந்துகொள்ளும் 'டை'க்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஒன்று அநாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டது; மற்றது அழகை அடிப்படையாகக் கொண்டது!

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### துரையூர் (ரெகுநாயகிபுரம்)
(தஞ்சை மாவட்டம்)

3-12-55 சனி மாலை 4-மணிக்கு, தோழர் அ. ராமையன் அவர்கள் தலைமையில், தி. மு. க. கிளை அமைப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் எம். கிருட்டினமூர்த்தி அவர்கள் கொடியேற்ற, தோழர்கள் என். எஸ். இளங்கோ, கு. அடைக்கலம்—ஆகியோர் பேசுவர்.

### மாயூரம்

3—12—55 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு மயூரம் போஸ்டாபீசுக்கு எதிரில். தி. வி. க. படிப்பகத் துவக்க விழாவும், கட்டிடத் திறப்பு விழாவும், பொதுக் கூட்டமும் நடைபெறும். தோழர் சி.பி.சிற்றரசு, மூவலூர்இராமாமிர்தம்மையார், என். கிட்டப்பா, வி. ஏ. பாண்டியன், பி. சாந்தா, ஆர். இராமானுசம், எம்.சி., கணபதி, எம்.சி., கே. எஸ். சௌந்தரராசன், பி. டி. ராசன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

### மதுரை

4—12—55 ஞாயிறன்று மதுரையில் கல்லக்குடி நடராசன் நினைவுப்படிப்பக இரண்டாவது ஆண்டுவிழா நடைபெறும். அ. குருசாமி அவர்கள் தலைமையில், மதுரை மாவட்ட செயலாளர் எஸ். முத்து, பி. கே. சேதுராமன், எஸ். எஸ். இராசா கே. எஸ். சந்தானம், சிற்றுளி சுப்பிரமணியம், திண்டுக்கல் சமதர்மம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

### உதகை

4—12—55 ஞாயிறு காலை 11—மணிக்கு அண்ணு முரசொலி மன்றத்தில் தி. மா. மு. க. கூட்டம் நடைபெறும். புதிய நிர்வாகிகள் தேர்வும், சீரிய முறையில் மாணவர் கழகம் பணியாற்றவும், மத்திய கழகத்துடன் தொடர்பு கொள்வதற்கான முறைகளைக் குறித்தும் பேசுவார்கள்.

### குடந்தை

குடந்தையில் 18-12-55 ஞாயிறு நடைபெறவிருக்கும் பொதுக்குழு முடிந்தவுடன், மாலை 6—மணிக்கு, அரண்மனைத் தோட்டத்தில் தி. மு. க. முன்னணி வீரர்கள் பலர் பேசுவார்கள்.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை







எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.

Best copy available